Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

ரூ 1-25

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி 14 வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 3 (30 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 210

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# ஒப்பந்த அமுலை உறுதி செய்வோம் - ராஜீவ்

# எம்.பிமார் ஏற்காவிடில் சபைகலைப்பு-ஜே.ஆர்

கொழும்பு, ஜூலை 30

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும், இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் நேற்று ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தில் உள்ள விடயங்கள் சரிவர அமுல் செய்யப்படுவதை இந்தியா உறுதி செய்துகொள்ளும் என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

ஒப்பந்தம் நகல் சட்டமாக்கப்பட்டுவிட்டது. அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதனை எம். பீக்கள் ஏற்கவில்லை என்றால் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

கைச்சாத்தான ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரும் ஆதரிப்பார்கள் என்றே நம்புகிறேன்.

ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டால் அவர்களின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்று திரு. ராஜீவ் தெரிவித்தார்.

இந்தியா எப்போதும் இலங்கையின் ஐக்கியத்தையும், அங்கு சமாதானத்தையும் நிலைநாட்டப் பாடுபடும் என மீண்டும் வலியுறுத்துகிறேன்—என்றும் திரு. காந்தி சொன்னார்.

இந்தியாவில் இலங்கையில் இருந்துவந்த அகதிகளே இருக்கிறார்கள். தீவிரவாதிகளின் முகாம்கள் எதுவும் இல்லை-என்றும் அவர் சொன்னார்.

இந்த ஒப்பந்தம் இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உதவும். அகதிகள் நாடு திரும்ப வழிவகுக்கும். இரு நாடுகளின் உறவு மீது போடப்பட்டிருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஒப்பந்த விவரம் 4 ஆம் பக்கத்தில்

### சுபநேரம்

30-07-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:-
7.33 முதல் 9.03 வரை
ராகுகாலம்:-
1. 33 முதல் 3.03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்



ராஜீவ் - ஜே. ஆர். சந்திப்பு

## பிரதமர் பிரேமா முழுப் பகிஷ்கரிப்பு!

கொழும்பு, ஜூலை 30

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு நேற்றுக்காலை அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகளைப் பிரதமர் பிரேமதாஸ பகிஷ்கரித்தார்.

கட்டுநாயக்கா விமானநிலையம், காலிமுகத்திடல், ஜனாதிபதி மாளிகை ஆகியவை முன் நடந்த வைபவம் எதிலும் திரு. பிரேமதாஸ கலந்துகொள்ளவில்லை.

ஜனாதிபதி மாளிகைக்குமுன் அமைச்சர்களை ஜனாதிபதி, பிரதமர் காந்திக்கு அறிமுகம் செய்துவைத்தார். அப்போதும் பிரதமர் பிரேமதாஸ அங்கிருக்கவில்லை.

(உ-எ)

## களனியில் மோதல் 20 மாணவர் பலி?

கொழும்பு, ஜூலை 30

நேற்று களனியில் பொலீஸாருக்கும் ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில் இரண்டு பொலீஸார் உயிரிழந்தனர். பின்னர் பொலீஸார் சுட்டதில் பலர் உயிரிழந்தனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் இருபது பேர் என்றும், பல்கலைக் கழக மாணவர்கள் அவர்கள் என்றும் யுனைட்டட் பிரஸ் இன்டர் நாஷனல் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது

களனிப் பொலீஸ் நிலையத்தை ஆர்ப்பாட்டக் காரர்கள் தாக்கினர். இரண்டு பொலீஸார் கூட்டத்தினரால் அடித்துக் கொல்லப்பட்டனர் அதைத் தொடர்ந்து பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது களனிப் பல்கலைக்கழகத்தில் இருந்தவர்களில் பலர் கொல்லப்பட்டனர்.

இப்படி பி.பி.சி. வானொலி நேற்று மாலை அறிவித்தது. (இ-எ)

## பத்து ஹெலிகள் சகிதம் ராஜீவ் குழுவினர் வந்தனர்

கொழும்பு, ஜூலை 30

நேற்றுக் காலை பத்தரைமணியளவில் இந்திய விமானப்படையின் விசேடவிமானம் ஒன்றில் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்தார்.

பிரதமருடன் அவரின் மனைவி சோனியா காந்தி மற்றும் அமைச்சர்களான பி.வி. நரசிம்மராவ், நட்வர்சிங், ப. சிதம்பரம், பண்ருட்டி இராமச்சந்திரன், கே.பி. எஸ். மேனன் உட்படப் பலர் வந்தனர்.

நிதி அமைச்சர் ரொனி டிமெல்லும் அவரின் மனைவியாரும் கட்டுநாயக்கா விமான நிலையத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் - ஜே.ஆர். தனிமையில் பேச்சு

கொழும்பு, ஜூலை 30

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் நேற்று இருதரப்பு உறவுகள் பற்றிப் பேச்சுக்கள் நடத்தினர்.

உதவியாளர் எவரும் இன்றி இரண்டு தலைவர்களும் சுமார் 45 நிமிடங்கள் தனிமையில் பேசினர்.

இரண்டு நாடுகளின் அரசியல், கலாசார, கல்வி மற்றும் துறைகள் பற்றி இப்பேச்சுக்கள் அமைந்திருந்தன.

வன்செயல்களில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், மற்றும் போராளிகளுக்கும் மறுவாழ்வு அளிப்பது பற்றியும் இரண்டு தலைவர்களும் பேசினர் என்று இந்திய வானொலி அறிவித்தது.

(உ-எ)

## நாடுமுழுதும் ஊரடங்கு

கொழும்பு, ஜூலை 30

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களை அந்த இடத்திலேயே சுடும்படி பாதுகாப்புப் படையினருக்கு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ-எ)

### முச்சந்தி முரளி



இரவிரவாக இந்திய விமானங்கள் பறந்துதுகள் ...! ஒப்பந்தம் கைச்சாத்தான நாலு மணி நேரத்திலேயே அப்ப இலங்கைக்கு உதவத் தொடங்கி விட்டினமோ... ...!.

# தென் இலங்கையில் நேற்றும் வன்செயல்கள்

## ரயிலுக்குத் தீவைப்பு ஊர்வலங்கள் கலைப்பு

கொழும்பு, ஜூலை 30

தென் இலங்கையின் பல பகுதிகளில் நேற்றும் வன்செயல்கள் இடம் பெற்றன என்று அறிவிக்கப்படுகின்றது.

மாத்தறையில் இருந்து வந்த ரயில் ஒன்று கலகக் காரர்களினால் தீக்கிரையாக்கப்பட்டது.

அப்போது பாதுகாப்புப் படையினர் சுட்டதில் நூறுபேர் வரையில் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இன்னொரு சம்பவத்தில் பௌத்த பிக்குகள் உட்பட பத்தாயிரம் பேர் வரை கொண்ட கூட்டம் ஒன்று கொழும்பு நகரை நோக்கி ஊர்வலமாக வந்தது.

இந்த ஊர்வலம் கொழும்புநகரில் இருந்து பன்னிரண்டு மைல் தூரத்துக்கு அப்பால் பொலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டது.

அப்போது ஏற்பட்ட கலகத்தில் பொலீஸார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் கதவடைப்பு!

கொழும்பு, ஜூலை 30

மட்டக்களப்பிலும்கதவடைப்பு நடத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வேண்டுகோளை அடுத்து கதவடைப்பு நடந்ததாக அறிவிக்கப்படுகிறது.

(உ-எ)

## பிரபா மீது இந்தியா ராஜதந்திர நெருக்குதல்

### புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மீது இந்திய அரசு இராஜதந்திர நெருக்குதலை மேற்கொண்டு வருவதாகப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தலைவர் பிரபா தமிழீழ மக்களின் இலட்சியத்திலிருந்து சிறிதளவும் பின்வாங்காது உறுதியாக இருந்து வருவதைத் தொடர்ந்து இந்திய அரசு அவர்மீது மிகவும் கடுமையான இராஜதந்திர நெருக்குதலை மேற்கொண்டுள்ளது.

இத்தகைய ஒரு நெருக்குதல் சூழ்நிலையில் தலைவர் கருத்துக்கள் தொடர்பாக பத்திரிகைகள், வானொலி உட்பட வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் வெளியிடும் கருத்துக்களை தமிழீழ மக்கள் நம்ப வேண்டாம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் பரீட்சை இல்லை

கொழும்பு, ஜூலை 30

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை இன்று வியாழக்கிழமையும் நாடு முழுவதும் நடைபெறமாட்டாது.

வழமைபோன்று நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் பரீட்சை நடைபெறும் என்று இலங்கை வானொலி அறிவித்தது.

## இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி சேதம்

மாத்தறையில் உள்ள இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி ஆர்ப்பாட்டக்காரர்களினால் சேதப்படுத்தப்பட்டது. பல கடைகள் உடைக்கப்பட்டன.

## இன்று பொது விடுமுறை

யாழ்ப்பாணம், ஜூலை 30

இன்று வியாழக்கிழமை இலங்கை முழுவதும் பொது விடுமுறை தினமாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (உ-7)

# குடாநாட்டில் நேற்று பூரண ஹர்த்தால்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ் குடாநாடு முழுவதும் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிராமங்கள் தோறும் வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டு மக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

இனப் பிரச்சினைக்கான உத்தேச ஒப்பந்தத்தை ஏற்குமாறு தமிழ்ப் போராளிகளை இந்தியா நிர்ப்பந்தித்து வருவதை ஆட்சேபித்தே ஹர்த்தாலும், உண்ணாவிரதமும் நடைபெற்றன.


நகரில் உள்ள கடைகள் அனைத்தும் முற்றுமுழுதாக மூடப்பட்டிருந்தன.

வீதி எங்கும் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

வாகனப் போக்குவரத்துகளும் நேற்று பூரணமாக நிறுத்தப்பட்டிருந்தன.

சகல பிரதான வீதிகளிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டு தடைகள் போடப்பட்டு மக்கள் ஆலயங்களிலும்

(4 ஆம் பக்கம் பார்க்க)



இந்திய அரசு தமிழ்ப் போராளிகள் மீது நிர்ப்பந்தம் செலுத்துவதை எதிர்த்து நேற்று திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கக் கட்டடம், கலட்டி பெரியதம்பிரான் ஆலயம் ஆகியவற்றின் முன்னால் பொதுமக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்த போது எடுக்கப்பட்ட படங்கள். (படம்-ஜெயம்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னஞ்சிறு விளம்பரம்**

### புத்தகம்

காத்திருந்ததுபோதும் வெளிவந்துவிட்டது "வாழ்க்கைக்கு நலம் தரும் நியூமராலஜி" தனிப்பிரதி 6/50, பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். தபாலில் பெறுவதாயின் ஒன்பது ரூபா முத்திரைகள் அனுப்பவும். டேவிட் லிகோரி, 38, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

(1280)

## தெல்லிப்பளை ப. நோ. கூ. ச. அகதிகளுக்கு உதவி

காங்கேசன்துறை, ஜூலை 30

வடமராட்சி, வலி வடக்கு, வலிகிழக்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து சங்கானைப் பகுதியில் தங்கியுள்ள 300 குடும்பங்களுக்கு 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகளை தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் அன்பளிப்புச் செய்துள்ளது.

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை, கலாசார மண்டபம், நீதிமன்றம் ஆகிய இடங்களில் தங்கியுள்ள அகதிகளுக்கே இந்த உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராசா இந்த உடுபுடைவைகளை கையளித்தார். (இ-68)

## கோழிகளுக்கு நோய் தடுப்பு ஊசி

யாழ் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் ஆதரவில் கொய்யாத்தோட்டம் புதுவீதி கலைச்சுடர் சனசமூக நிலையத்தில் இன்று வியாழக்கிழமை காலை கோழிகளுக்கு இலவச நோய்த் தடுப்பு ஊசி போடப்படுகிறது. (இ)

# மூதூரிலிருந்து தமிழர்கள் திருமலைக்கு இடம்பெயர்வு

## இராணுவ கெடுபிடி அதிகரிப்பு

திருகோணமலை, ஜூலை 30

200க்கும் அதிகமான தமிழ்க் குடும்பங்கள் மூதூர் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து திருமலை வந்து சேர்ந்துள்ளனர்.

சம்பூர், சேனையூர், கூனித்தீவு, கட்டைபறிச்சான், தோப்பூர், பச்சயூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவை இந்தக் குடும்பங்கள்.

மூட்டை முடிச்சுகளுடன் இவர்கள் திருமலை வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் 'கிளப்பன்பேர்க்' அகதி முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப பகுதிகளில் இராணுவத்தினரின் கெடுபிடி தாங்கமுடியாமல் பாதுகாப்புக் கருதியே தாங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக இவர்கள் தெரிவித்தனர்.

இக் குடும்பங்களுக்கு திருமலை இந்து இளைஞர் பேரவையினர் உணவளித்து, ஒரு இரவு தங்குவதற்கு வசதி செய்து கொடுத்து அடுத்த நாள் முகாமுக்கு அனுப்பி வைத்தனர்.

இதேவேளை புதிதாக சம்பூர் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட இராணுவ முகாமுக்கு மேலும் பல துருப்புக்களும், வாகனங்களும் வந்து சேர்ந்துள்ளன.

கடந்த வாரம் மூதூர் நகரில் வைத்து இருவர் (ஒரு பெண் உட்பட) சுட்டுக் கொல்லப்பட்டனர். இதனை அடுத்தே இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. மூதூரிலிருந்து இயந்திரப் படகுமூலம் பிரயாணம் செய்பவர்கள் நடுக்கடலில் வைத்து கடற்படையினரால் சோதனை செய்யப்படுகின்றனர்.

திருமலை கடற்படைத் தளத்திலிருந்து ஹெலிக்கொப்டர்கள் தினமும் மூதூர் பிரதேசத்திற்கு மேலாகப் பறந்து திரிகின்றன. (இ-எ-150)

## செஞ்சிலுவை சங்கத் தலைவர் வருகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. ஈ. பி. அபயசேகர எதிர்வரும் ஆறும் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

இவருடன் செஞ்சிலுவைச் சங்கப் பொருளாளர் திரு எம் ஐ. சுமணதாசவும் யாழ்ப்பாணம் வருவார்.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தினால் மந்திகை ஆஸ்பத்திரிக்கு என அனுப்பிவைக்கப்பட்ட அம்புலன்ஸை திரு ஈ.பி. அபயசேகரா மந்திகை வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம் ஏழாம் திகதி உத்தியோகபூர்வமாக கையளிப்பார்.

இதேவேளை இந்திய நிவாரணப் பொருள் வழங்கப்படுவதை மேற்பார்வை செய்யவென மூன்று ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (உ-10)

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ஜூலை 30

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இருந்து இம்முறை ஜீ சி ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவிகள் அதிபர்பா இராஜேந்திர சிங்கத்தை ஆகஸ்ட் 20க்கு முன் உடுவில்மகளிர் கல்லூரியில் நேரடியாக சந்திக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

1987 டிசம்பர்ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு மாணவிகளின் பாடவிவரங்கள் முழுப்பெயர் என்பன தேவை.

இரண்டாம் முறை தோற்றுவோர் மேற்படி விவரங்களுடன் முத்திரைப் பணம் 35 ரூபாவுடனும் அதிபரைச் சந்திக்குமாறு கோரப்படுகின்றனர். (இ-7-161)

## இந்திய மருந்து வகைகள் இன்னும் இல்லை

கொடிகாமம், ஜூலை 30

இந்திய செஞ்சிலுவைச் சங்க மருந்து வகைகள் மிருசுவில் வைத்தியசாலைக்கு இன்னும் வழங்கப்படவில்லை.

வடமராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களும் தென்மராட்சிக்கிழக்குப் பகுதி மக்களும் இங்கு மருந்து பெறச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

இங்கிருந்து சுமார் ஐந்து மைல் தொலைவில் உள்ள சாவகச்சேரி வைத்தியசாலைக்கு இவர்கள் செல்லவேண்டியுள்ளது. (இ-75)

## வடக்குநோக்கி வரும் தமிழர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தென் இலங்கையில் இருந்து மேலும் பல தமிழர்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

தென் இலங்கையில் நிலவும் கொந்தளிப்பான அரசியல் சூழ்நிலையே இதற்குக் காரணம். (இ-10)

## முஸ்லிம் பகுதிகளில் தேர்தல் சூடுபிடிப்பு

மட்டக்களப்பு ஜூலை 30

கிழக்கு மாகாணத்தில் பிரதேச சபைத் தேர்தல் முஸ்லிம் பகுதிகளில் தற்போது சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஐ.தே.க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (சுயேட்சை) ஆகியன தமது பிரசார கூட்டங்களை தற்போது நடத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

ஐ.தே.க. பிரசாரக் கூட்டங்களில் உள்ளூர் முஸ்லிம் அரசியல் வாதிகள் மட்டும் ஈடுபட்டுள்ளார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் வெளியூர் அரசியல் வாதிகள் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ள மாட்டார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்தலில் ஐ.தே.கவுடன் பலப்பரீட்சையில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (சுயேட்சை) இனமோதலை ஏற்படுத்துவதற்குத்தேர்தலைப் பயன்படுத்துவதாக ஐ.தே. கட்சியினர் தமது பிரசாரக்கூட்டங்களில் குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி எம்.எச்.எம். அஸ்ரப் தனது கட்சியின் வெற்றிக்காக சூறுவளிப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். (இ-21)

## "காத்தவன் காவியம்" அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

கவிஞர் தேவதாசனல் பாடப்பட்ட "காத்தவன் காவியம்" என்னும் நூலின் முதலாவது அறிமுக விழா 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி அளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்கு மண்டபத்தில் நடைபெறும். முன்னாள் மீன்பிடி இலாகா பரிசோதகர் திரு. எல். பி. பிலிப் தலைமைவகிப்பார்.

ரோமாபுரியில் பாப்பிறையின் தென்கிழக்காசியாவின் பிரதிநிதியாக இருந்த வணபிதா. எல். பி. இராயப்பு அடிகளார் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

கவிஞர் சரவைககிழார் நவாலியூர் சச்சிதானந்தன்ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். (இ-161)

## பணிப்பாளர் மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூலை 30

நல்ல நிலையிலான இரண்டு அம்புலன்ஸ்களை கொண்டு வந்து சேர்த்ததுக்கு யாழ் போதனவைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ் நச்சினர்க்கினியன், யாழ் செயலக பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. ரி. குலசேகரத்துக்கு நன்றி தெரிவித்தார்.

பணிப்பாளரிடம் உதயன் செய்தியாளர் கருத்துக் கேட்டபோது "எடுத்த முயற்சி பயன் அளித்து விட்டது. இனியும் நல்லவை நடக்கும் என்று எதிர்பார்ப்போம்" என்றார்.

அத்துடன் இரண்டு லொறிகளும் வெகு விரைவில் வந்து சேரும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். (இ-10)

## மயிலிட்டி தெற்கு குரும்பசிட்டி மக்களுக்கு அரச நிவாரணப் பொருள்

யாழ்ப்பாணம் ஜூலை 30

அரசாங்கத்தினல் வழங்கப்படும்நிவாரணப் பொருள்களை குரும்பசிட்டி, மயிலிட்டிதெற்கு மக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மயிலிட்டி தெற்கு கிராம சேவகர் இதற்குரிய அனுமதிப்பத்திரங்களை எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மல்லாகத்திலுள்ள வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக வைத்து வழங்குவார்.

அதேவேளை, இந்திய நிவாரணப் பொருள்களை இதுவரை பெறத்தவறிய குரும்பசிட்டி மக்களுக்கும் அதற்குரிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் என மயிலிட்டி தெற்கு பிரசைகள்குழுத் தலைவர் அறிவித்திருக்கிறார். (இ)

## சாவகச்சேரி கல்வி வட்டாரத்துக்கு மேலும்இலவசநூல்கள்

கொடிகாமம் ஜூலை 30

65 பாடசாலைகள் உள்ள சாவகச்சேரிக் கல்வி வட்டாரத்துக்கு 1987ஆம் ஆண்டுக்கான இலவச பாட புத்தகங்கள் மேலும் 20,000 வழங்கப்பட்டுள்ளன.

இந்த கல்வி வட்டாரத்துக்கு முன்னிருந்த பாட புத்தகங்களுடன் மொத்தமாக இவ்வருடம் 69,886 நூலகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் வருடத்துக்குத் தேவை என விண்ணப்பித்த நூல்களின் எண்ணிக்கை 1,21,582ஆகும்

விண்ணப்பிக்கப் பட்ட நூல்களில் இன்னும் வழங்கப்பட வேண்டியவை 51,696 ஆகும்.

இம்மாதம் கிடைத்த நூல்கள் மாணவர்களுக்கு மிக உதவக்கூடிய விஞ்ஞான, கணித, ஆங்கிலம், சமுகவியல், வர்த்தக நூல்கள் என்றுதெரிவிக்கப்படுகிறது. (இ-75)

# லொறியில் ஏற்றி அனுப்பியபொருள்கள் புலிகளால் பறிமுதல்

வடமராட்சி, ஜூலை 30

வடமராட்சிப் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான ரி. வி., டெக் போன்ற பொருள்களை ஏற்றிச் சென்ற தனியார் லொறி ஒன்றை வரணி தடைமுகாமில் வைத்து புலிகள் கைப்பற்றினர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

வர்த்தகர் ஒருவர் நெல்லியடியில் உள்ள தமது கடையில் இருந்து ரி. வி. டெக் மின்விசிறி, தையல் மெஷின்போன்ற பொருள்களை லொறியில் ஏற்றினர்

பின்னர் அந்தப் பொருள்களைத் திருகோணமலையில் உள்ள தமது கடைக்குக்கொண்டுசெல்வதாகக் கூறிச் சென்றார்.

இதுகுறித்து துப்புக்கிடைத்த போராளிகள் வரணி தடை முகாமில் லொறியை மறித்துச் சோதனையிட்டனர்.

பெரும் எண்ணிக்கையான ரி.வி, டெக் போன்ற பொருள்கள் லொறியில் காணப்பட்டன.

இது தொடர்பாக, லொறியில் இருந்த கடை உரிமையாளரை விசாரித்தபோது —

தமது கடைப் பொருள்களுடன் நெல்லியடியில் உள்ள இராணுவத்தினரும் தமது பொருள்களை ஏற்றி அவற்றை வவுனியா மூன்றும் பிட்டியில் உள்ள கடை ஒன்றில் சேர்க்குமாறு சொன்னதாகவும் அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து லொறியில் இருந்த பொருள்களைப் பறிமுதல் செய்த போராளிகள் கடை உரிமையாளரையும் லொறியின் சாரதி, கிளீனர் ஆகியோரையும் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். (இ-7-160)


வரையறுக்கப்பட்ட

**கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம், மூளாய்.**

**வருடாந்த பொதுக் கூட்டம்**

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 – 08 – 87 ஞாயிற்றுக்கிழமை காலை 9–30 மணிக்கு மூளாய் வைத்தியக்கல்லூரி புதிய மண்டபத்தில் நடைபெறும்

பிரேரணைகள் அனுப்பவிரும்பும் அங்கத்தவர்கள் 7-8-87க்கு முன் செயலாளருக்கு அனுப்பிவைக்கவும். நிகழ்ச்சி நிரல் பின்பு அனுப்பிவைக்கப்படும்.

மூளாய், சுழிபுரம். 27-7 87

கௌரவசெயலாளர்


## மானிப்பாயில் புதிய மின் இணைப்பு வேலைகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை30

மானிப்பாய் பட்டின பிரதேசத்திலுள்ளசோதி வேம்படிஒழுங்கை, நெசவாலை ஒழுங்கை போன்ற பகுதிகளுக்கான புதிய மின் இணைப்பு வேலைகள் முடிவுற்றுள்ளன.

இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான அங்கீகாரத்தைபிரதான மின் பரிசோதகரிடம் இருந்து எதிர்பார்த்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இதற்கான அங்கீகாரம் வெகுவிரைவில் கிடைத்து விடும் என்றும் அறியப்படுகிறது.

மானிப்பாய் பட்டின சபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும், மின் அத்தியட்சகரும், பிரதேச பொதுமக்களும் மேற்கொண்ட துரித முயற்சியினுலேயே இம்மின்விஸ்தரிப்புவேலைகள் இவ்வளவு விரைவில் நடைபெறக் கூடியதாக இருந்தது.

இதேவேளை, சட்ட விரோத மின் பாவனைகளும் பட்டின எல்லைக்குள் தொடர்ந்து துண்டிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. (இ-ஒ)

## ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

உடுப்பிட்டி கிராமிய வங்கி மூலம் ஓய்வூதியம் பெறுபவர்கள் நாளை 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணிமனையில் ஜூன், ஜூலை மாதங்களுக்குரிய ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியப் பற்றுச்சீட்டுகள் தபால் மூலம் கிடைக்கப்பெருதவர்கள் தங்கள் பற்றுச்சீட்டை உடுப்பிட்டி கிராமிய வங்கி முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். செயலக கணக்காளர் அறிவித்துள்ளார். (இ-10)

## வல்வை நெல்லியடிப் பகுதிகளில் ராணுவத்தினர் வீதிகளில் வயர்களைப் புதைக்கின்றனராம்

வடமராட்சி, ஜூலை 30

வல்வெட்டித்துறை, நெல்லியடி பிரதான வீதிகளில் இராணுவத்தினர் கிடங்குகளை வெட்டி வயர்களை நிலத்தினுள் புதைக்கிறார்களாம்.

இதை நேரில் கண்ட வயோதிபர் ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தென்மராட்சியில் இருந்து வல்வெட்டித்துறையில் உள்ள எனது வீட்டுக்குப் பொருள்களை எடுப்பதற்காகச் சென்றேன்.

என்னைப்போல வேறு சிலரும் அங்கு வந்தனர்.

எங்களைக் கண்ட இராணுவம் 'இங்கே ஏன் வந்தீர்கள்' என்று கேட்டு அடித்துத் துரத்தியது.

சிலர் பஸ் மூலம் திரும்பிவிட்டனர் நானும் இன்னும் இருவரும் ஓட்டமும் நடையுமாகவந்து கொண்டிருந்தோம்.

அப்பொழுது பிரதான வீதிகளில் ஆங்காங்கே இராணுவத்தினர் கிடங்கு வெட்டி வயர்களைப் புதைப்பதைக் கண்டோம்.

இவ்வாறு அந்த வயோதிபர் மேலும் தெரிவித்தார். (இ-7-160)

## வரட்சி நிவாரண உணவு முத்திரை

குருநகர், ஜூலை 30

உதவி அரசாங்க அதிபர் ஊடாக பதின்மூன்று மாவட்டங்களுக்கு வரட்சி நிவாரண உணவு முத்திரைகள் வழங்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகள் பலவற்றில் இருந்து கிடைக்கப்பட்ட நிவாரண நிதிகளைக் கொண்டு வழங்கப்படுகின்ற நிவாரண முத்திரைகளைப் பெற இருக்கின்ற மாவட்டங்கள் எவை என்று தெரிவிக்கப்படவில்லை (இ-51)

## அந்த 'ஸ்ரிக்கர்' ஒட்டியது யார்?

யாழ்ப்பாணம். ஜூலை 30

யாழ் போதனவைத்தியசாலைக்கு கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட இரண்டு அம்புலன்ஸ்களில் ஒன்றில் "ஸ்ரிக்கர்" ஒன்று ஒட்டப்பட்டு இருந்தது

அதில் "பூவுலகில் அமைதி நிலவுவதாக" (May peace prevail on Earth) என ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

கொழும்பில் தங்களிடம் வாகனங்கள் ஒப்படைக்கப் பட்ட பின்னரே அந்த 'ஸ்ரிக்கர்' எவராலோ ஒட்டப்பட்டதாக அம்புலன்ஸைக் கொண்டுவந்த அதிகாரி தெரிவித்தார். (இ-10)

## வவுனியாவிலிருந்து கொழும்பு செல்லும் ரயில் நேரத்தில் மாற்றம்

வவுனியா, ஜூலை 30

வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரனின் சிபார்சின் பேரில் வவுனியாவிலிருந்து பகல் 12 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படும் யாழ்தேவி ரயில் தற்போது பிற்பகல் 1-30 மணிக்கு புறப்பட்டுச் செல்கின்றது.

யாழ். பயணிகளின் நன்மையைக் கருதி இந்த நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தார்கள்,

இந்த நேரமாற்றம் சனிக்கிழமை முதல் அமுலுக்கு செய்யப்படுகின்றது. (இ-164)

## சிவராசாவின் கொலை தமிழருக்குப் பெரும் இழப்பு

காங்கேசன் துறை, ஜூலை 30

'வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் சிவராசா கொல்லப்பட்டது கண்டனத்துக்குரியதாகும். சிறந்த கல்விமானும், சேவையாளரும், பண்பாளருமான அவர் கொலை செய்யப்பட்டது தமிழ் மக்களுக்குப் பெரும் நஷ்டத்தை உண்டுபண்ணியுள்ளது'

வலிவடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றியத்தின் கூட்டமொன்று ஒன்றிய அலுவலகத்தில நடைபெற்றது.

அப்போது மேற்கண்டவாறு தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டத்தரணி வி. எஸ். கணேசலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

பின்வரும் தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன

வலிவடக்கு பகுதி பொதுமக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக உளரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது பற்றி உளவியல் நிபுணர்களைக் கொண்டு ஆய்வு நடத்தி இப்பாதிப்பிலிருந்து மீள மக்களுக்கு ஆலோசனைகள் வழங்குதல்.

வலிவடக்கில் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட பாதிப்புகளை தொகுத்து அரச அதிபர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் நிவாரண அமைப்புகளுக்கு அனுப்பி வைத்தல். (இ-68)

## மினிவான் சைக்கிள் மோதல்

கொடிகாமம், ஜூலை 30

கொடிகாமம் ரயில் நிலையத்துக்குச் சமீபமாக யாழ் கண்டி பிரதான வீதியில் மினிவான் ஒன்று சைக்கிள் ஒன்றை மோதியது.

இதனல் இளைஞர் ஒருவர் காயம் அடைந்தார்.

இளைஞர் உடனடியாக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கும் பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கும் கொண்டு செல்லப்பட்டார். (இ-75)

## அமைச்சரவை மாற்றம் இல்லை

கொழும்பு, ஜூலை 30

அமைச்சரவையில் உடனடியாக மாற்றம் ஏற்படாது—

அமைச்சர் காமினி திஸநாயக்கா இப்படித் தெரிவித்தார்.

கடந்த திங்கள் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் திரு திஸநாயக்கா இத்தகவலை வெளியிட்டார். (இ-எ)

### மக்கள் முகம்

## மெமோறியல் பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை பழைய மாணவர் சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்கள் வருமாறு,

தலைவர்: திரு. சு. தருமசிலன், உபதலைவர்கள்: திருவாளர்கள் இ. வசந்தசேனன், க. திருநாவுக்கரசு, செயலாளர்– திரு. அ. மு. அருணசலம், உபசெயலாளர்: திரு. எம். யேசுரட்ணம், பொருளாளர்: திரு. செ. கமலபாதம். எண்பரிசோதகர் திரு. எம். மாணிக்கம்.

திரு. க கமலசேகரம், வீ. இராஜதுரை. இ. சடாட்சரம், பொ. யோகராசா, மா. கந்தசாமி, வ. திருநாவுக்கரசு, திருமதிகள் ச. இரத்தினசிங்கம், த பத்மலோசனி, செல்வி தி. இராசமணி ஆகியோரடங்கிய நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (இ)

## வீடுகளைப் பார்த்துவரும் அகதிகள்

கொடிகாமம், ஜூலை 30

கொடிகாமம் சாவகச்சேரிப் பகுதிகளில் தஞ்சமடைந்த வடமராட்சி மக்கள் தினமும் அங்கு சென்று வீடுகளைப் பார்த்துவருகிறார்கள்.

இராணுவத்தினர் அங்கு சிலரின் வீடுகளில் படுத்துறங்குகின்றனராம்.

பல வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவற்றைத் திருத்தஞ் செய்தே வசிக்க வேண்டியுள்ளதெனவும் பலரும் தெரிவித்தனர். (அ-75)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

தொழில் செய்யும் கரங்கள், ஜெபம் செய்யும் உதடுகளிலும் பார்க்க பரிசுத்தமானவை.

— பகவான் சத்திய சாயிபாபா

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
30 07.1987 த.பெ.இல: - 23

## வெளிச்சமான சந்தேகம்

இதனை எழுதும் வேளை, இனப்பிரச்சினை சம்பந்தமான இலங்கை - இந்திய, ஜே. ஆர்.- ராஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்தாகிவிட்டது.

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை அது சரிவர, பூரணமாக நிறைவேற்றவில்லை என்பது மிகத் தெளிவானது எனவே இதனைத் தமிழ் மக்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தமாகக் கருதும் நிலை அவ்வேளை உருவாகவில்லை.

ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் இன்றுதான் சரியாகவும், முழுமையாகவும் தெரியவரும். அதன் பின்னரே ஒப்பந்தத்தினால் தமிழர்கள் எந்தளவுக்கு தமது உரிமைப் போராட்டத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கு ஏற்பட இருக்கும் பாதிப்புகள் என்ன, அரசாங்கம் வழங்கியிருக்கும் அற்ப சொற்ப ''எலும்புத் துண்டுகள்'' என்ன என்ற விவரங்களைக் கண்டறிய முடியும்.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் பல தடவைகள் எழுதியது போல, மாகாணசபைத் திட்டம் தமிழர்களுக்குப் பூரண சுயாட்சியைத் தானும் வழங்கவில்லை. அந்த மாகாண சபைத் திட்டத்தையே பிரதான உள்ளுடலாகக் கொண்டு ஒப்பந்தம் உருவாகியுள்ளது.

வடக்கு - கிழக்கு இணைப்பு (அதுவும் கூடத் தற்காலிகம்!), தமிழர் தனித் தேசிய இனமாக அங்கீகரிக்கப்படுதல், தமிழ் ஆட்சி மொழியாக ஏற்கப்படுதல் ஆகிய மூன்றுமே ஒப்பந்தத்தில் புதிதெனச் சொல்லக் கூடியவை

இந்த சில நியாயமான, உரிமைகளை வழங்குவதற்குக் கூடத் தென்னிலங்கையில் எழுந்துள்ள எதிர்ப்பைப் பார்க்கும் போது, அப்பகுதி வாழ் சிங்கள-பௌத்த தீவிரவாதிகளும், மத குருமாரும் ஒரே இலங்கையில் தமிழர்களை நிம்மதியாக வாழ விடுவார்களா என்ற சந்தேகம் பளிச்சென எழுகிறது.

ஒப்பந்தத்தை எதிர்த்து தென்னிலங்கையில் நடக்கும், கலவரங்கள், குழப்பங்கள் அந்தச் சந்தேகத்தை வலுவடையச் செய்கிறது.

நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைவதாக அரசாங்கத்தால் சொல்லப்படும் ஒப்பந்தத்தை, ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்துதான் கைச்சாத்திட வேண்டிய கேவல நிலை ஏற்பட்டது.

அது மட்டுமா? ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வந்த இந்தியப் பிரதமருக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு உபசாரத்தையே ரத்துச் செய்ய வேண்டியதாயிற்று.

மிகவும் வெட்கப்படக்கூடிய சூழ்நிலையில், அதாவது ஊரடங்கை அமுல் செய்து தென் இலங்கை மக்களை வீட்டில் இருக்கச் செய்த சூழ்நிலையில், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

தமிழர்களுக்கு அவர்களது அடிமட்ட அடிப்படை உரிமைகளை வழங்குவதற்குக்கூட, தென்னிலங்கை மக்கள் தயாராக இல்லை என்பதையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட சூழ்நிலை பிரதிபலிக்கிறது.

தமிழர்களை ஆளப்படும் இனமாக வைத்திருக்க வேண்டும் என்று, எப்படி 38 வருடங்களுக்கு முன்னரே சிங்களவர்கள் விரும்பினார்களோ, அதே நிலையில் தான் இன்றும் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை தெற்கில் நடக்கின்ற கலவரங்கள், குழப்பங்கள், ஊரடங்கு என்பன மிகத் தெட்டத் தெளிவாக எடுத்தியம்புகின்றன.

இந்த மனநிலையில் இருப்பவர்களுடன் தமிழர்கள் எப்படித்தான் சேர்ந்து வாழமுடியும்? ஜே. ஆர் — ராஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட விதம் அந்தக் கேள்விக்கு மேலும் வெளிச்சமூட்டி நிற்கிறது!

## தனகா மீதான சிறைத்தண்டனை
### நீதிமன்றினால் ஊர்ஜிதம்

டோக்கியோ, ஜூலை 29

லஞ்சம் வாங்கிய வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஜப்பானின் முன்னாள் பிரதமர் தனகாவுக்கு விதிக்கப்பட்ட நான்கு வருட சிறைத் தண்டனையை டோக்கியோ உயர் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க் கிழமை உறுதி செய்தது.

சிறைத்தண்டனையுடன் திரு. தனகாவுக்கு பெரும் தொகைப்பணம் அபராதமாகவும் விதிக்கப்பட்டது.

தனகாவுடன் வேறு நான்கு நபர்கள் மீது பொய்க் கையெழுத்திட்டு மோசடியில் ஈடுபட்டது, லஞ்சம் வாங்கியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

அமெரிக்காவில் உள்ள லொக்ஹீட் நிறுவனத்திலிருந்து விமானங்கள் வாங்கியபோது 2 கோடி டாலர் லஞ்சம் வாங்கியது என்பது தனகாமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் ஒன்று.

அக் குற்றம் புரிந்த சமயம் தனகா, ஜப்பானின் பிரதமராக இருந்தார்.

தனகா தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்வார் என்று அவரின் வழக்கறிஞர்கள் தெரிவித்தனர். (இ-எ)

### கூட்டம் ஒத்திவைப்பு

புதுடில்லி, ஜூலை 29

இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளும் கடந்த செவ்வாய்க் கிழமை எதிர்க்கட்சி எம்.பிக்கள் செய்த ரகளையால் பல தடவைகள் ஒத்திவைக்கப்பட வேண்டியதாயிற்று.

லோகசபை இரண்டு தடவைகளும் ராஜ்ய சபை மூன்று தடவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

போபர்ஸ் ஆயுத பேர விவகார விசாரணை சம்பந்தமான கமிட்டி நியமனம் பற்றி ஆராயப்பட்டபோதே, எம். பிக்கள் குழப்பம் செய்தனர். (இ-எ)

### இத்தாலியில் கூட்டரசு பதவி ஏற்பு

ரோம், ஜூலை 30

இத்தாலியின் புதிய கூட்டணி அமைச்சரவை இன்று பதவி ஏற்கும் என்று அறிவிக்கப்படுகின்றது.

1981 தொடக்கம் பதவியில் இருந்து வரும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி தலைமையிலான 5 கட்சிகள் கூட்டணியே மீண்டும் பதவி ஏற்க இருக்கிறது.

### 200 பேர் உயிரிழப்பு

இஸ்லாமபாத், ஜூலை29

பாகிஸ்தானில் கராச்சியில் முஸ்லிம்களின் இரண்டு பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற மோதலில் 200க்கு அதிகமானோர் உயிரிழந்தனர். 300 க்கு அதிகமானோர் காயமடைந்தனர். (இ-எ)

# அஸாமில் பெருவெள்ளம்
## போர்க்கால அடிப்படையில் மீட்புப் பணியில் இராணுவம்

கௌஹாத்தி, ஜூலை 29

அஸாம் மாநிலத்தில் வெள்ள அபாயம் மேலும் மோசமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

போர்க்கால அடிப்படையில் இராணுவத் துருப்புக்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

பிரமபுத்திரா நதி கரைபுரண்டு ஓடுகின்றது.

இதனால் கிளைநதிகள் கரையை உடைத்துக் கொண்டு கிராமங்களை வெள்ளக்காடாக்கியுள்ளன.

ஒரு பகுதியில் மட்டும் மூன்று லட்சம் மக்கள் வரையில் வீடிழந்து அகதிகளாகிவிட்டனர்.

இடைக்கால நிவாரண உதவிகளை வழங்கும்படி அஸாம் மாநில முதலமைச்சர் பிரபுல்லா மஹந்தா மத்திய அரசுக்கு அவசர வேண்டுகோளை விடுத்தார்.

மேற்கு வங்காளத்திலும் வெள்ளத்தினால் இரண்டு லட்சத்துக்கு அதிகமானோர் வீடிழந்துவிட்டனர். (இ-எ)

### வெளி உலகில்

பங்களாதேஷில்

## ஜனாதிபதி வாசஸ்தலம் அருகில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்குத் தடை

டாக்கா, ஜூலை 30

பங்களாதேஷ் ஜனாதிபதி முகமட் எர்ஷாட்டின் உத்தியோக வாசஸ்தலத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டம், கூட்டங்கள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி இதற்கான உத்தரவை திங்கள் பிறப்பித்தார்.

எதிர்க்கட்சிக் கூட்டணிகள் ஜனாதிபதி மாளிகை அருகில் ஆர்ப்பாட்டம் கூட்டங்களை வியாழக்கிழமை (இன்று) நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளன.

எதிர்க்கட்சிகள் வன்செயல்களில் ஈடுபடுவதை ஜனாதிபதி கண்டித்தார்.

இதன் மூலம் ஜனநாயக வழிகளுக்கு நாடு திரும்புவது தாமதப்படும் என்றும் ஜனாதிபதி எர்ஷாட் நினைவுபடுத்தினார். (இ-எ)

### 230 வருடச் சிறை!

லேகோஸ், ஜூலை 29

ஊழல் புரிந்த குற்றச் சாட்டின் மீது குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் அக்கவுண்டன்ட் ஒருவருக்கு நைஜீரிய இராணுவ நீதிமன்றம் 230 ஆண்டுகால சிறைத்தண்டனை விதித்தது.

அரசுத்திணைக்களம் ஒன்றில் 1973 முதல் 1984 வரை உதவி பிரஷ்டணக்காளராகக் கடமையாற்றும் போது ஊழல் புரிந்ததாக முகமது அலியேலி என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவர் 56 வீடுகள், 26 மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றை வைத்திருந்ததாகவும் 7 வங்கிகளில் 27 நடைமுறைக் கணக்குகளை வைத்திருந்ததாகவும் இராணுவ நீதிமன்றத்தில் அரசு தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## ஆயுதக்குறைப்பு உடன்பாடு சாத்தியம்
### அதிபர் றேகன் நம்பிக்கை

வாஷிங்டன், ஜூலை 29

வரலாற்றுப் புகழ்மிக்க ஆயுதக் குறைப்பு உடன்பாடு ஒன்றை இரண்டு வல்லரசுகளும் கைச்சாத்திடுவதற்கான காலம் கனிந்துவிட்டது.

இப்படி அமெரிக்க அதிபர் றேகன் அறிவித்தார்.

ஜெனிவா ஆயுதக் குறைப்பு மாநாட்டில் ரஷ்யா முன் வைத்துள்ள புதிய யோசனையைத் தொடர்ந்து புதிய சூழ்நிலை உருவாகிவிட்டது.

முட்டுக்கட்டையாக இருப்பது மேற்கு ஜேர்மனியில் அமெரிக்கா வைத்துள்ள பெர்ஷிங் ஏவுகணைகள் 72 ஐயும் அகற்றும்படி ரஷ்யா கோருவதே.

முந்திய யோசனைகளில் இக் கோரிக்கை முன் வைக்கப்படவில்லை.

இப்படி அதிபர் றேகன் தெரிவித்தார்.

இதனிடையில் எதிர்வரும் செப்டம்பர் 20 இல் அமெரிக்க சோவியத் வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேச உள்ளனர்.

இச் சந்திப்பு அதிபர் றேகன் - சோவியத் தலைவர் கோர்பச்சேவ் சந்திப்புக்கு வழி வகுக்கும் என்று நம்பப்படுகின்றது. (இ-எ)

### அங்கோலாவில் 150 போராளிகள் உயிரிழந்தனர்

கேப்டவுன், ஜூலை 29

அங்கோலாவின் தென் பகுதியில் தென்ஆபிரிக்க அரசுத் துருப்புக்களுக்கும் அங்கோலிய, நமீபியா போராளிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களில் 150 வரையிலான அங்கோலிய, நமீபியா போராளிகள் உயிரிழந்தனர்.

இப்படி தென் ஆபிரிக்க அரசு அறிவித்திருக்கின்றது. (இ-எ)

### வழக்குத் தாக்கல்

வாஷிங்டன், ஜூலை 29

அணுக்குண்டு தயாரிப்பதற்குத் தேவையான எஃகுப் பொருளை அமெரிக்காவில் இருந்து கடத்தியது தொடர்பாக அமெரிக்க நீதிமன்றத்தில் மூவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (இ-எ)

# அகதி முகாம் நடத்தியவரும் தற்போது அகதி
## இந்திய நிவாரணம் பெற வந்தோர் அனுபவங்கள்

— கோப்பாய்ச் செய்தியாளர் க.விக்கினேஸ்வரன் —

கோப்பாய், ஜூலை 30

நாங்கள் பத்தமேனியில், திருகோணமலை அகதிகளுக்கான முகாம் ஒன்றை நடத்திவந்தோம். இப்பொழுது அவர்களுடன் சேர்ந்து நாங்களும் அகதிகளாகி ஆவரங்கால் சிவன் கோவிலில் இருக்கின்றோம்.

இவ்வாறு பத்தமேனி பிரசைகள் குழு உறுப்பினரான ரி. சிவலிங்கம் உதயன்செய்தியாளரிடம் தெரிவித்தார்.

நான் விவசாயத்தையே நம்பியிருந்தவன். எனது வீடும் தோட்டமும் வளலாய் இராணுவ முகாமருகே உள்ளன. இனி என்னைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

கோப்பாய் உதவி அரச அதிபர் பணிமனையில் இந்திய நிவாரணப் பொருள் பெறப் குழுமி நின்ற மக்களில் சிலரை உதயன் செய்தியாளர் சந்தித்தபோது தெரிவிக்கப்பட்ட மற்றும் சில தகவல்கள் வருமாறு:

நான் விவசாயம்செய்து வந்தேன் வடமராட்சிச் சம்பவத்துடன் எமது அடையாளக் கார்ட் உணவு முத்திரை என்பனவற்றை விட்டுவிட்டு ஓடி வந்து விட்டோம்.

எமது கிராம சேவையாளரும் அகதியாய்ச் சென்று விட்டார். எனக்கு இதுவரை எந்த விதமான நிவாரணமும் கிடைக்கவில்லை.

மாற்றுடைகூட இல்லாமல் அவதிப்படுகிறேன் நிவாரணம் தரும்படி கேட்டால் உணவு முத்திரை அல்லது அடையாளக் கார்ட்டை கொண்டு வரும்படி கேட்கிறார்கள்.

என்ன வாழ்க்கை இது இப்படி அலுத்துக் கொண்டார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சீவரத்தினம்.

எனக்கு இன்னமும் இந்திய நிவாரணம் கிடைக்கவில்லை நேற்று பிரசைகள் குழு காரியாலயத்துக்குச் சென்றேன். எனது கிராமத்தின் கிராம சேவையாளரைச் சந்திக்கும்படி அங்கு கூறினர். ஆனால், கிராம சேவையாளரைக் காண்பது குதிரைக்கொம்பாக உள்ளது.

இப்படிக் கூறினார் உடுப்பிட்டியைச் சேர்ந்த தங்கராணி.

திருகோணமலையில் இருந்து அகதியாய் வந்த எஸ்.மகேஸ்வரன் கூறியதாவது:

எனது அண்ணனை பலவத்தை இராணுவ முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

அவர் மீதான விசாரணைகள் முடிந்து அவர் நிரபராதி என தெரிந்தும்கூட அவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

இப்படி அவர் கூறினார்.

கோப்பாய் உதவி அரச அதிபரைச் சந்தித்த போது— இதுவரை ஆறுயிரம் பேருக்கு இந்திய நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி, பத்தமேனியைச் சேர்ந்தவர்களுக்கும் இந்திய நிவாரணம் வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார். (இ-7-ரி)

### சமய சந்நிதிகளில்

### சுந்தரமூர்த்தி நாயனார்தினம்

கொடிகாமம் ஜூலை 30

எதிர்வரும் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உசன் அருள்மிகு கந்தசுவாமி கோவிலில் சுந்தரமூர்த்தி நாயனார் தினம் அனுட்டிக்கப்படும்.

உசன் பொது மக்கள் அனுசரணையுடன் நடைபெறும் இவ்வைபவத்தில் சுந்தரர் தேவாரப்பதிகம் முழுவதும் முற்றோதல் செய்யப்படும். (இ-75)

## சாரண ஆசிரியரின் சேவைக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை30

சாரணியப் போட்டிகளில் அகில இலங்கையில், கிளிநொச்சி மாவட்டம் முதலிடத்தைப் பெறுவதற்குக் காரணம் ஆசிரியர் திரு. மா. புவனேந்திரனின் தன்னலமற்ற சேவையாகும்.

இவ்வாறு திரு. மா. புவனேந்திரனின் பாராட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி பாராட்டு விழா அண்மையில் பளை மகாவித்தியாலய மண்டபத்தில் அதிபர் அ. பொ. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட ஆணையாளர் திரு. க. பாலகிருஷ்ணன் உரையாற்றுகையில்'இலங்கையில் உள்ள 40 சாரணர் இயக்கங்களில் 1982 ஆம் ஆண்டுக்குப் பின் கிளிநொச்சி மாவட்ட சாரணர் இயக்கம் செய்த சாதனைகளைப் போல் எந்த மாவட்டமும் செய்யவில்லை.

இதற்கு முக்கிய பொறுப்பாளராக இருந்தவர் திரு. புவனேந்திரன் ஆவர் என்று தெரிவித்தார்.

யாழ் பரியோவான் கல்லூரி உதவி அதிபர் ஜே. என். பொன்னையா பேசுகையில் கூறியதாவது:-

பளைமகாவித்தியாலயம் இரண்டு பெரும் சாதனைகளைப் புரிந்துள்ளது.

அன்று வீடொன்று தீப்பற்றி எரியும்போது அதைக்காப்பாற்ற முயன்று உயிர் நீத்தார் சாரணர்சற்குணநாதன்.

இன்று திரு. மா. புவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பொய்யாமொழி



குறள்:

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.

பொருள்:

செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும்.

### வாசகர் நெஞ்சம்

## இரண்டு சதிகள்

நான்கு வருடங்களாக வீரதீரத்துடன் போராடும் விடுதலைவீரர்களின் திறம்பாத நிலையை உணர்ந்த ஸ்ரீலங்கா அரசு, போரின் வழி சென்றால் நாடு பிரியும் என்ற பயத்தில் ''ஷாம'' (சமாதான வழியில்) வழியில் இறங்கும் அரசியல் சாணக்கியத்தில் புதைந்து கிடப்பதைப் புரிந்துகொள்ளல் அவசியமாகும்.

சதி 1. வடக்கு கிழக்கு இணைப்புக்கு 'மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு'

சதி 2. திருகோணமலைத் துறைமுகமும் அதனை உள்ளடக்கிய பிரதேசமும் 'மத்திய அரசின் கீழ் அமைவது'

இரண்டும் காலப்போக்கில் தமிழர் சுயாட்சியைப் பலவீனப்படுத்தும் 'சீனி பூசிய நச்சுக் குளிகைகள்' என்பது திண்ணம். 'ஷாம' வழியில் உட்புகுந்து நாளடைவில் 'பேத' நிலையை இது நிச்சயமாக விஸ்வரூபமாக்கி விடும்,

எனவே, இப்பொழுது உருவாக்கும் சுமுகமான முடிவு ''மக்கள் தீர்ப்பு'', ''இடைக்காலச் சமரசம்'' என்ற போர்வைக்குள் திணிக்கப்படக் கூடாது.

முடிவானதும், நிரந்தரமானதும் என்றுமே மாற்றப்படக் கூடாததுமான ஒப்பந்தம் ஒன்றே வேண்டும்.

எனவே நம்மினம் பட்ட பாட்டோடும், கெட்ட கேட்டோடும் வெட்டொன்று துண்டு இரண்டாக அறப்பேசி உறக்கொள்ளும் உறுதிமனப்பான்மையுடன் தமிழ் அரசியல் ஞானிகள் சாதுரியமாக அரசியல் முடிவுசெய்ய வேண்டும்.

மேலும் ''சுய நிர்ணயஉரிமைச் சுதந்திரத்தையும் — மலைநாட்டில் வாழும் 10 லட்சம் மக்களின் சமத்துவமும் சுதந்திரமுமான 'சட்ட அமைவையும் ஈழத்தமிழரே நிச்சயமாகப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற பெரும் பொறுப்பையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்வது மிகவும் அவசியமானதாகும்

வித்துவான் அ சந்தியாபிள்ளை, இளவாலை.

## நல்லூர்க் கந்தன் மஹோற்சவம் நாளை ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம் ஜூலை 30

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை சிறப்பாக நடத்துவதற்காக பல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த கோவிலைச்சுற்றி வீதிகள் அவசர அவசரமாக திருத்தப்பட்டு வருகின்றன.

கோவிலின் அருகேயிருந்த சில கடைகள் உடைக்கப்பட்டு ஆலய வீதிகள் விசாலிக்கப்பட்டுள்ளன.

வீதிகளில் அங்கங்கே தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கோவிலின் உள்ளே நடைபெற்ற கட்டட வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளன.

இந்த ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாவது தெரிந்ததே. (அ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகலவித
ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


# உதயன்

30-07-1987 வியாழக்கிழமை


மீண்டும் வழமையான இடத்தில்
★ ராஜ் கோபால்ஸ் ★
திருமண வைபவங்களுக்கேற்ற
பட்டுப்புடைவைகளைப் பெற்றுக்கொள்ள
★ ராஜ் கோபால்ஸ் ★
47, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

48 மணி நேரத்தில் யுத்த நிறுத்தம்

# போராளிகளுக்கு மறுவாழ்வு ஏற்பாடு

## ★ அவசரகாலச் சட்டம் நீக்கம்
## ★ அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு
## ★ அந்நிய இராணுவம் வரத் தடை

கொழும்பு, ஜூலை 30

நேற்றுக் கைச்சாத்தான இலங்கை - இந்திய உடன்பாட்டின்படி 48 மணி நேரத்தில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரும்.

போராளிகளுக்கு மறுவாழ்வு அளித்து அவர்களைத் தேசியப் பெருவாழ்வில் சேர்த்துக் கொள்ள இலங்கை அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

இத்துடன் மேலதிகமாக இந்த உடன்பாட்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கும் மற்றைய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ 48 மணி நேரத்தில் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படும்.

★ யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க இந்திய - இலங்கை கூட்டு அவதானிகள் குழு நியமிக்கப்படும்.

★ அமைதி காக்கும் படையை இலங்கைக்கு அனுப்பி வைக்கவும் இந்தியாவுக்கு உரிமை உண்டு.

★ வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமுலில் உள்ள அவசரகாலச் சட்டம் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்குள் நீக்கப்படும்.

★ வடக்கு கிழக்கிற்கு ஒரே பொது மாகாண சபை இருக்கும்

★ மாகாண சபைகள் 1987 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் இயங்கத் தொடங்கும்.

★ கிழக்குமாகாணம், இப்பொது மாகாண சபையில் தொடர்ந்து இருக்க வேண்டுமா என்பது பற்றி கிழக்கு மாகாண மக்களிடையே 1988 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

★ ஆயுதங்களைப் போராளிகள் 72 மணித்தியாலங்களுக்குள் ஒப்படைக்க வேண்டும்.

அரசு இராணுவம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இருந்த நிலைக்கு ஐந்து தினங்களுக்குள் திரும்பிவிட வேண்டும்.

★ இந்தியாவை பயங்கரவாதப் பயிற்சிபெறும் மண்ணாக இடம் கொடாமல் இருக்க இந்திய அரசு பார்த்துக் கொள்ளும்.

★ பாக்கு நீரிணையைக் கடந்து ஆட்களும் ஆயுதங்களும் வருவதைத் தடுக்கும் வகையில் இந்தியக் கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபடும்.

★ அரசியல் கைதிகள், மற்றும் பிற கைதிகளுக்கு பொது மன்னிப்பளிக்கப்படும்.

★ போராளிகளுக்கு மறுவாழ்வளித்து அவர்களை தேசியப் பெருவாழ்வில் சேர்த்துக்கொள்ள இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும்.

★ அந்நிய நாடுகளின் இராணுவ மற்றும் புலனாய்வு அதிகாரிகளின் நடபாட்டங்களினால் இந்திய—இலங்கை உறவுக்குப் பங்கம் ஏற்பட்டுவிடாமல் இருக்க, மற்றைய நாடுகளுடன் தனியே கடிதத் தொடர்பு மட்டும் வைத்திருப்பதாக இலங்கை அரசு கூறியுள்ளது.

★ வெளிநாட்டு ஒலிபரப்பு அமைப்புக்களுடன் இலங்கை செய்து கொண்டிருக்கும் ஒப்பந்தங்களில் வழங்கப்பட்டிருக்கும் வசதிகளை இராணுவ மற்றும் புலனாய்வு நோக்கங்களுக்கு பாவிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இதற்காக அவ்வசதிகளை மறுபரிசிலனை செய்ய இலங்கை அரசு ஒப்புக் கொண்டிருக்கின்றது. (உ-எ-7)

## இராணுவத் தளமாக திருமலையை மாற்ற உடன்பாட்டில் தடை!

கொழும்பு. ஜூலை30

இந்திய நலனுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் இராணுவக் கேந்திரமிக்க திருகோணமலைத் துறைமுகத்தையோ, வேறு துறைமுகத்தையோ வேறுநாடுகள் பயன்படுத்த இலங்கை அனுமதிக்காது.

இலங்கை – இந்திய உடன்படிக்கையில் இது முக்கிய அம்சமாக இருக்கும் என அறிவிக்கப்படுகின்றது. (உ-எ)

## இன்றைய ஊர்வலங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

போராளிகள்மீது இந்திய நிர்ப்பந்தத்தை எதிர்த்து யாழ்ப்பாணத்தில் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்தப்படும்.

ஏழாலை உதயசூரியன் அறிவக முன்றலில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் இணுவில் வரை செல்லும்.

இணுவில் கந்தசுவாமி கோவிலில் ஆரம்பமாகும் ஊர்வலத்துடன் இணையும் இந்த ஊர்வலம் பின் யாழ்நகரை நோக்கி வரும்.

கோப்பாய்ச் சந்தியில் இருந்தும் ஊர்வலம் ஒன்று ஆரம்பமாகும். (இ-7-68)

## சாரண - - - .

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

னேந்திரன் கிளிநொச்சி மாவட்டத்தை இலங்கையிலும் உலகிலும் முதலிடத்திற்குகொண்டு வந்துள்ளார்' என்று சொன்னார்.

விழா இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (அ-7)


## திருமண அறிவித்தல்

1987 ஜூலை மாதம் 15 ஆம் திகதி பி. ப. 5. 00 மணியளவில் எமது கனிஷ்ட புத்திரி அனெற்பமிலாவுக்கும், தென் இந்தியா, கன்னியாகுமரியைச் சேர்ந்த S. ஜெயமணி என்பவருக்கும், கன்னியா குமரி, உபகாரமாதா கோவிலில், பெற்றோர் நிச்சயித்து விவாகம் இனிதே நடைபெற்றது என்பதை உற்றார் உறவினர், நண்பர்களுக்கு இத்தால் அறியத் தருகிறோம்.

திரு. திருமதி. S. T. சிறிநாதன்
கிழக்குத்தெரு, ஊர்காவற்றுறை.
(1373)


## பத்து ஹெலிகள் - - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தில் வைத்து பிரதமர் காந்தியை வரவேற்றனர்.

பிரதமர் வந்த விமானத்துக்குப் பாதுகாப்பாக பத்து இந்திய இராணுவ ஹெலிக்கொப்டர்களும் வந்தன.

பிரதமர் காந்தி குழுவினர் பின்னர் ஹெலிக்கொப்டர் ஒன்றில் காலிமுகக் கடற்கரைத் திடலில் வந்திறங்கினர்

பின்னர் மோட்டார் கார் பவனியாக ஜனாதிபதிமாளிகைக்கு பிரதமர் அழைத்து வரப்பட்டார்.

அங்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.

இராணுவத் தளபதி மேஜர் நளின் செனவிரத்தின தலைமையில் இராணுவ அணிவகுப்பு மரியாதை அவருக்கு அளிக்கப்பட்டது

ஜனாதிபதி ஜெயவர்த்தன பிரதமரை வரவேற்று சபாநாயகர், பிரதம நீதியரசர் மற்றும் அமைச்சர்களுக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். வெளிநாட்டுத் தூதர்களுக்கு பிரதமர் காந்தி அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் காந்திக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகள் சுமார் 11 மணியளவில் ஆரம்பமாகி 20 நிமிடங்களில் முடிவடைந்தன.

ஊரடங்குச் சட்டம் காரணமாக வீதிகளில் பாதுகாப்புப் படையினரின் நடமாட்டம் மட்டுமே காணப்பட்டது.

காலிமுகத்திடலில் இருந்து ஜனாதிபதி மாளிகை செல்லும் வீதியின் இருமருங்கிலும் இலங்கை, இந்திய தேசியக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன.

ஜனாதிபதி மாளிகை முன் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் காந்தி ஏற்கும்போது இந்திய, இலங்கை தேசிய கீதங்கள் இசைக்கப்பட்டன.

## குடாநாட்டில்----

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளிலும், சனசமூக நிலையங்களிலும் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

இதேவேளை இன்று நகரின் பல பகுதிகளிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடைபெறவுள்ளன. (உ-10)

## றேகன் பாராட்டு

அமெரிக்க அதிபர் றேகன், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குப் பாராட்டுச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பொறுமையுடன் அமைதித் தீர்வு ஒன்றைக்கண்ட துணிச்சலுக்காகப் பாராட்டுவதாக அதிபர் றேகன் தனது செய்தியில் தெரிவித்திருக்கின்றார். இலங்கை ஜனாதிபதியையும் அதிபர் றேகன் பாராட்டியிருக்கின்றார்.

## வெளிநாட்டுச் செய்தியாளர்

கொழும்பு, ஜூலை 30

இலங்கை - இந்திய உடன்பாடு கைச்சாத்திடும் வைபவம் பற்றிய செய்திகளைச் சேகரிக்க வெளிநாட்டுச் செய்தியாளர்கள் பலர் கொழும்பு வந்தனர்.

பிரதமர் காந்தியுடன் இந்தியச் செய்தியாளர்கள் வந்தனர். (இ-எ)

## அத்துலத்தும் இல்லை

கொழும்பு, ஜூலை 30

பிரதமர் ராஜீவ்காந்தி கொழும்பில் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் பிரதமர் பிரேமதாஸ, அமைச்சர் அத்துலத்முதலி, அமைச்சர் காமினி ஜெயசூரியா ஆகியோர் கலந்து கொள்ளவில்லை என்று தெரியவருகின்றது.

இப்படி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (உ-எ)

## ஒப்பந்த ------

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மேகங்களை இந்த ஒப்பந்தம் அகற்றுகிறது—

விவேகத்துக்கும் புரிந்துணர்வுக்கும் கிடைத்த காணிக்கையாக இது அமைகின்றது— என்றும் திரு ராஜீவ் காந்தி சொன்னார்.

திரு ஜெயவர்த்தன ஒப்பந்தம் குறித்தும் இந்தியா குறித்தும் தெரிவித்தவையாவது:-

பல ஆண்டுகளாக நாடு சிவில் யுத்தத்தில் சிக்கி இருந்தது. அது இன்றுடன் முடிவடைகின்றது.

எனது அரசு, உங்கள் அரசு, தமிழ் நாடு அரசு ஆகியனவும், உபயோகமில்லாத யுத்தம் ஒன்றை நடத்தியவர்களும் இந்த உடன்படிக்கையை சரிவர அமுல் நடத்தினால் சமாதானம் இன்றே ஆரம்பமாகும்

எனது அரசியல் வாழ்க்கை நியாயமானகாலம் நீண்டது எனக்கு எதிராக நடந்து கொண்டவர்களை நான் எப்போதும் மன்னித்தே வந்துள்ளேன். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை மட்டும் நான் மறப்பதில்லை.

பிழை விடுவது மனித இயல்பு; மறப்பது தெய்வீகம்.

உங்கள் நாடும், மக்களும் எமக்குத் துன்பம் விளைவித்திருந்தால் நான் அதை மன்னிக்கிறேன்– ஆனால் அதை நான் மறக்கமாட்டேன்.

உலக முன்னேற்றத்திற்காகவும், பிராந்திய முன்னேற்றத்திற்காகவும் இரண்டு நாடுகளும் கரம் கோர்த்துச் செயற்படுவோம்.

—இவ்வாறு திரு. ஜெயவர்த்தன கூறினார். (அ-எ)

## தென்-- --

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சுட்டு இருவர் உயிரிழந்தனர் என்று ஆஸ்திரேலிய வானொலி அறிவித்தது. பலர் உயிரிழந்தனர் என்று பி.பி.சி. வானொலி நேற்று மாலை அறிவித்தது.

இதனிடையில் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இடம் பெற்ற பொலீஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20ஆக அதிகரித்தது. (இ-எ)

★ குடாநாட்டின் பல பகுதிகளில்

# உண்ணாவிரதம், ஊர்வலம்
# கொடும்பாவி எரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை30

போராளிகள் மீதான இந்திய நிர்ப்பந்தத்தை எதிர்த்து நேற்று யாழ்ப்பாணமெங்கும் உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள், பகிஷ்கரிப்புக்கள், கொடும்பாவி எரிப்புக்கள் இடம் பெற்றன.

அரைகுறைத் தீர்வை கண்டித்தும், எமது உண்மை நிலையை தமிழக மக்களுக்கு உணர்த்தவுமே உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டதாக அதைஒழுங்கு செய்தவர்கள் தெரிவித்தனர்.

### கோப்பாயில்

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமிகோவிலில் நடைபெற்றஉண்ணாவிரதத்தில் பல பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இதன் முடிவில் ஜே. ஆர். அமிர்தலிங்கம், 'புளொட்' 'ரெலோ' 'ஈ. பி ஆர் எல். எப்' இயக்கங்களின் தலைவர்கள் ஆகியோரது கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

நீர்வேலியில் அமிர்தலிங்கத்தினதும் லலித் அத்துலத்முதலியினதும் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

### குருநகரில்

நேற்றைய எதிர்ப்பு தினத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் பொருட்டு குருநகர், சின்னக்கடைப் பகுதிகளில் சகல கடைகளும் மூடப்பட்டிருந்தன.

தனியார் கூட்டுத்தாபனங்கள் தொழிற்சாலைகள் என்பனவும் இயங்கவில்லை.

### காங்கேசன்துறையில்

தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், மருதனாமடம், இணுவில் ஆகிய பகுதிகளிலும் கடையடைப்பும் ஹர்த்தாலும் முழுமையான முறையில் நடைபெற்றன.

மல்லாகம் பழம்பிள்ளையார் ஆலயம், சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் சுன்னாகம் சந்தை ஆகியவற்றில் மக்கள் உண்ணாவிரதமிருந்தனர்.

### ஆனைக்கோட்டையில்

இங்கு ஜே. ஆர், அமிர்தலிங்கம், ரெலோ, புளொட், ஈ.பி. ஆர். எல். எப் என்று எழுதப்பட்ட பொம்மைகள் வைக்கப்பட்டிருந்தன.

இனத்தை விற்ற உங்களுக்கு மன்னிப்பே கிடையாது என்று அவற்றின் கீழே எழுதப்பட்டிருந்தது.

மேற்படி கொடும்பாவிகள் மூத்த விநாயகர் ஆலயத்தில் இருந்து மானிப்பாய் வீதிக்கு இழுத்து வந்து எரிக்கப்பட்டன.

### வவுனியாவில்

வவுனியா மாவட்டத்திலுள்ள மதியாமடு, அடம்பன், ஆயிலடி, சன்னாசியந்தன், நயினாமடு ஆகிய இடங்களைச் சேர்ந்த சுமார் 700 மக்கள் நயினாமடுச் சந்தியில் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்கள். (இ)

### மற்றும் இடங்கள்

வண்-வடமேற்கு, நாவலடி பேச்சியம்மன் ஆலயம், திருவள்ளுவர் சனசமூக நிலையம் உயரப்புலம் அடைக்கல நாயகி தேவாலயம், நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம், கொக்குவில் மேற்கு காந்திஜீ சனசமூக நிலையம், பாரதிசனசமூக நிலையம் ஆயவற்றிலும் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

### அடிக்கடி பறந்த விமானங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

நேற்றுமாலை தொடக்கம் இரவுவரை நகருக்கு மேல் வடக்கிலிருந்து தெற்காகவும் தெற்கிலிருந்து வடக்காகவும் அடிக்கடி விமானங்கள் பறந்துகொண்டிருந்தன.

தெற்கில் பெரும் கலவரங்கள் நிகழலாம் என அச்சம் தெரிவிக்கப்படுவதால் வடக்கிலிருந்து தெற்கிற்கு இராணுவத்தினர் கொண்டுசெல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்பட்டது. (உ இ)



நேற்றைய ஹர்த்தாலின்போது யாழ் நகர வீதி ஒன்று வெறிச்சோடிக் கிடப்பதைப் படத்தில் காணலாம். (படம்-ஜெயம்)

இலங்கையிலிருந்து

## ராஜீவ் 'திரும்பியவுடன் தொடர்ந்து பேச்சு!

### டில்லியில் பிரபா அறிக்கை

புதுடில்லி, ஜூலை 30

பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பில் இருந்து திரும்பியதும் தொடர்ந்து அவருடன் பேச்சுக்கள் நடத்துவோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியை கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய பின்னர் திரு. பிரபாகரன் இந்த அறிக்கையை விடுத்தார்.

சமாசத் திட்டத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி பிரதமரிடம் தெரிவித்தோம்.

அக்கறையுடனும் உண்மையாகவும் நான் கூறியவற்றை அவர் கேட்டுக் கொண்டார்.

ஆயுதங்கள் ஒப்படைக்கப் பட்ட பின்னர் தமிழர்களின் பாதுகாப்பின்மை பற்றிய எமது அச்சத்தை பிரதமர் நன்கு புரிந்து கொண்டார்.

தமிழர் அபிலாஷைகளுக்கு தனது ஆதரவையும் பிரதமர் தெரிவித்துக் கொண்டார்.

—இப்படி திரு. பிரபாகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்று பி.பி.சி. வானொலி நேற்று அறிவித்தது. (உ-எ)

### பிறிதொரு தினத்தில்

நல்லூர்மஹோற்சவத்தை முன்னிட்டு உதயன் உங்களுக்கு உவந்தளிக்க இருக்கும் ''அதிஷ்டப் பயணம்'' பற்றிய விவரம் பிறிதொரு தினத்தில் உதயனில் வெளிவரும். — ஆசிரியர்

## பிரபா மீது - - - - - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

எ வும் —

நேரடியாகத் தமிழீழ மக்களுக்கு தலைவரினால் விடுவிக்கப்படும் நேரடிச் செய்திகளை மட்டுமே ஏற்றுக் கொள்ளுமாறும் வேண்டுகிறோம்.

ஒப்பந்தம் தொடர்பாக புலிகளின் தலைவர் பிரபா திருப்தி தெரிவித்ததாக இந்திய— இலங்கை வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் செய்தி அப்பட்டமான பொய் எனவும்—

தமிழீழ-தமிழக மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக ஒருபக்க சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதையும் எம் மக்களுக்கு தெரியப்படுத்துகிறோம்.

தமிழீழ மக்களின் நலன்களைக் கருத்தில் எடுக்காத; தமிழ் மக்களைக் குழப்புகின்ற இவ்வாறான திட்டமற்ற நடவடிக்கைகளை நாம் வன்மையாக கண்டிப்பதுடன் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் இலட்சியத்தில் உறுதியுடனும் தெளிவுடனும் உள்ள எம் மக்களை எதுவும் செய்யமுடியாது என்பதையும் தெளிவுபடுத்துகிறோம்.

இவை குறித்து மிகவும் தெளிவாக இருக்குமாறு எம் மக்களை வேண்டிக் கொள்கிறோம்.

இன்றைய சூழ்நிலையில் எங்கள் செய்திகளைத் தவிர, வேறு வெகுஜனத் தொடர்பு சாதனச் செய்திகளை நம்பவேண்டாம் என்றும் வேண்டிக் கொள்கிறோம். (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ... நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 30-07-1987
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Thursday July 30, 1987.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விசேட பதிப்பு
விலை ரூபா 1-00 மட்டுமே

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி 14 வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 3 (30 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 210

## கொழும்பில் வைத்து

# ராஜீவ்காந்தி தாக்கப்பட்டார்

### ஸ்ரீலங்கா கடற்படைச் சிப்பாய் கழுத்தில் ரைபிளால் இடித்தார்!!

கொழும்பு, ஜூலை 30

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி இன்று வியாழக்கிழமை காலை கொழும்பில் வைத்துத் தாக்கப்பட்டார்!

இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் இந்தியப் பிரதமரின் கழுத்தில் ரைபிள் (Butt) பின்பக்கத்தால் இடித்தார்!

கழுத்திலும் தோளிலும் ரைபிள் பட்ட போதிலும், திரு. காந்தி ''இது பற்றிக் கவலைப் படவேண்டாம்'' என்று வெகு ''சிம்பிளாக''க் கூறினர்.

திரு. காந்தி இன்று காலை டில்லி திரும்பு முன்னர் அவருக்கு அணி வகுப்பு மரியாதை நடைபெற்றது.

அப்போதே, கடற்படைச் சிப்பாய் ஒருவர், திரு. காந்தி தனக்கு அருகே கம்பீரமாக நடந்து சென்ற வேளை ரைபிளின் பின்பக்கத்தால் இடித்தார்.

இந்தச் சம்பவம் ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் நடந்தது.

இன்று காலை இந்தியா திரும்பும் முன்னர் திரு. காந்திக்குப் படை அணி வகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

அச்சமயம் திரு. காந்தி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு வந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றது.

திரு. ராஜீவ் காந்தியின் இடதுபுறக் கழுத்து, தோள் பக்கங்களில் ரைபிள் இடிபட்டது.

திரு. ராஜீவ் காந்தி தாக்குதலினால் தடுமாற வில்லை.

'இது பற்றிக் கவலைப் படவேண்டாம்' என்று திரு. காந்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பின்னர் திரு. காந்தியை, அவரின் மெய்ப் பாதுகாவலர்கள் காருக்குப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

### ஜெயவர்த்தன பார்த்து நின்றார்!

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கடற்படைச் சிப்பாய் தாக்கியதை ஜனாதிபதி ஜெயவர்த்தன பார்த்துக் கொண்டிருந்தார்.

பிரதமரைத் தாக்கிய சிப்பாயை, சக சிப்பாய்கள் பிடித்திழுத்தனர். பின்னர் அவரின் கைகள் இறுகக் கட்டப்பட்டன.

இச்சம்பவம் பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தன கருத்து வெளியிட்டார்.

'பிரதமரைத் தாக்கிய சிப்பாய் சூரியக்கதிர்த் தாக்கு (Sun Stroke) இலக்கானதால் இது நடந்தது' — என்று ஜனாதிபதி சொன்னார். (உ—எ)

# புலிகள் அனுமதியின்றி இந்தியத் துருப்புகள் வெளியேற மாட்டா!

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களில் தரை இறங்கிய உள்ள இந்தியத் துருப்புக்கள் எமது அனுமதி இன்றி முகாம்களை விட்டு வெளியேறமாட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் பேச்சாளர் திரு மூர்த்தி இன்று (வியாழன்) காலை யாழ்-பழைய பூங்காவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயிரக் கணக்கான பொதுமக்கள் இப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு. மூர்த்தி தொடர்ந்து பேசுகையில், ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டிருக்கும் வடமராட்சி, திருகோணமலை, பலாலி இராணுவ முகாம்களில் ஏராளமான இந்தியத் துருப்புகள் இந்திய விமானங்கள் மூலம் நேற்று இரவோடிரவாக இறக்கப்பட்டன.

தற்போது தங்கி உள்ள முகாம்களில் இருந்து இந்தியத் துருப்புகள்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### தலங்கம பொலீஸ் தாக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 30

தலங்கம பொலீஸ் நிலையம் நேற்றுப் பகல் தாக்கப்பட்டது.

இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு எதிராகக் கோஷமிட்ட கும்பல் ஒன்றே இத்தாக்குதலை நிகழ்த்தியதாகக் கூறப்படுகிறது.

கொழும்பிலிருந்து 24 மைல் தொலைவில் தலங்கம அமைந்திருக்கிறது. (உ)

## ஹர்த்தால் தொடர்கிறது ஊர்வலங்கள் ரத்து

யாழ். குடாநாட்டில் இன்றும் ஹர்த்தால் தொடர்ந்து அனுஷ்டிக்கப்படுகிறது.

தமிழ்ப் போராளிகள் அமைப்பின் மீது இந்திய அரசாங்கம் திணிக்கும் நிர்ப்பந்தங்களை எதிர்த்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவது தெரிந்ததே.

இன்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற இருந்ததாயினும் பின்னர் அவை நிறுத்தப்பட்டு பொதுக் கூட்டங்கள் மட்டும் நடைபெற்றன.

இதேவேளை இன்னும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்த வாகனப் போக்குவரத்துக்களும் நிறுத்தப்பட்டிருந்தன. (இ-10)

### ராஜீவ் திரும்பினார்

புதுடில்லி, ஜூலை 30

பிரதமர் ராஜீவ் காந்தி இன்று காலை 11 15 மணியளவில் சட்டுநாயக்காவில் இருந்து புறப்பட்டார்.

பிற்பகல் 2 மணியளவில் பிரதமர் புதுடில்லி வந்தடைந்தார் (உ-எ)

### ஊரடங்கு நீடிப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 30

இன்று 11 மணியுடன் முடிவடைய இருந்த ஊரடங்குச் சட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளைய தினத்தை அரச வங்கி வர்த்தக விடுமுறையாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது (உ-10)

### வேண்டுகோள்

சென்னை, ஜூலை 30

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல்நடத்த உதவுங்கள்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிமுன்சண்டவாறு கேட்டுள்ளது. (இ-எ)

### ஸ்ரீலங்கா இராணுவம் வடமராட்சியில் வாபஸ்?

ஒப்பரேஷன் லிபரேஷன் தாக்குதலின்போது வடமராட்சியில் ஸ்ரீலங்கா சிப்பாய்களினால் போடப்பட்ட மினி முகாம் அகற்றப்பட்டு சிப்பாய்கள் வாபஸ் பெற்று வருகின்றனர்.

செய்தி அச்சுக்குப் போகும் சமயம் கிடைத்த முன்வந்த தகவல்கள் மேற்கண்டவாறு தெரிவிக்கின்றன. (இ-7-10-160)

### வெள்ளைகொடியுடன் வந்த சிப்பாய்கள் புலிகளுடன் உரையாடினர்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வயாவிளான் இராணுவ சென்றியில் இருந்த ஐம்பதுக்கும் அதிகமான இராணுவத்தினர் நேற்று விடுதலைப் புலிகளின் சென்றி நிலைக்கு வந்து உரையாடினர்.

இராணுவ சென்றியில் ஆயுதங்களை வைத்துவிட்டு வெள்ளைக் கொடியுடன் வந்த சிப்பாய்கள் புலிகளிடம் மிகவும் அன்னியோன்யமாகக் கலந்துரையாடினர்.

''நீங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கும் வரை நாம் முகாம்களில் இருப்போம்.

''நாம் போராட்டத்தில் இன்பம் காணவில்லை. இவ்வளவு காலமும் மனச்சாட்சிக்கு முரணாகவே தாக்குதல்களை நடத்தினோம்'' என்றும் அவர்கள் புலிகளிடம் கதைக்கும் போது கூறினர்.

இலங்கை — இந்திய ஒப்பந்தத்தால் தமக்கு விடுமுறை கிடைத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சுமார் ஒருமணி நேரம் இந்த உரையாடல் நடைபெற்றதாம்

புலிகளுக்கு இராணுவத்தினர் பிஸ்கெட் கொடுத்து மகிழ்ந்தனர். (உ-10-7 160)



ஒப்பந்தப் பத்திரங்களை ராஜீவும் ஜே. ஆரும் பரிமாறும் நேற்றைய காட்சி

## வடக்கு, கிழக்கு முகாம்களில்

# இந்தியத் துருப்புகள் திடீர் தரை இறக்கம்

### இரவிரவாக அவசர ஏற்பாடு

யாழ்ப்பாணம் ஜூலை 30

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள படை முகாம்களில் இந்தியத் துருப்புகள் தரை இறக்கப்பட்டன.

ஜே. ஆர். — ராஜீவ் ஒப்பந்தம் நேற்றுப் பிற்பகல் கைச்சாத்தான கையோடு, நேற்று இரவிரவாக, அவசர அவசரமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பலாலி, வடமராட்சி திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள படை முகாம்களில் புதன் இரவு ஏழு மணி முதல் இன்று அதிகாலை வரை சுமார் மூவாயிரம் இந்தியத் துருப்புகள் இந்திய விமானங்களில் கொண்டு வந்து இறக்கப்பட்டதாக முன் வந்த செய்திகள் தெரிவித்தன

பலாலியில் தரை இறக்கப்பட்ட இந்தியத் துருப்புகள் பின்னர் பருத்தித் துறை, வல்வெட்டித் துறை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

ஜே. ஆர் — ராஜீவ் ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டதுபோல எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு முன்னர் தமிழ்ப் போராளிகளிடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளவே இந்தியத் துருப்புக்கள் அவசரமாகத் தரை இறக்கப்பட்டதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

ஆயுதங்களைப் பெற்றுக் கொண்ட பின்னர், இவை அமைதி காக்கும் படையாக இங்கே நிலைகொள்ளும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதே வேளை, ஆயுதங்களை ஒப்படைப்பது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனுக்கும், இந்திய உயர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

### எங்கும் புலிக்கொடி பறக்கிறது

யாழ்ப்பாணம் ஜூலை 30

தமிழீழ விடுதலைப் புலிகளின் சகல முகாம்களிலும், வாசனங்களிலும் புலிகளின் கொடிகள் இன்று பறக்கவிடப்பட்டு இருந்தன.

எமது நியாயமான கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டம் தொடரும் என்பதைக் காட்டுவதற்காகவே இந்தக் கொடிகள் பறக்கவிடப்படுகின்றன.

இப்படிப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிவப்பு நிறத்திலான சீலையில் மஞ்சள் நிறப் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கொடி இது.

இந்தக் கொடியை அனைத்து தமிழீழ ஆதரவாளர்களும் தமது வீடுகள், வாகனங்களில் ஏற்றுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-7-10-160)

### கடல் வழியாகவும் துருப்புக்கள் வந்தன

இந்தியத் துருப்புக்கள் தென் இந்தியாவில் இருந்து வடபகுதிக்கு அனுப்பப்பட்டன.

அரைவாசித் துருப்புக்கள் விமானங்கள் மூலமும் மிகுதித் துருப்புக்கள் கப்பல்கள் மூலமும் அனுப்பிவைக்கப்பட்டன.

இப்படி யுனைட்டட் பிரெஸ் இன்டர்நேஷனல் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்தியத் துருப்புக்கள் பலாலி முகாமில் இலங்கை இராணுவ பிரிகேடியர் ஜே. ஈ. டி. சில்வாவின் அனுசரணையுடன் யுத்த நிறுத்தப் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (இ-எ)

### துருப்புகள் பூரணமாக நிலைகொண்ட பின்னர் யுத்த நிறுத்தம்

இந்தியத் துருப்புக்கள் தமிழர் பகுதிகளில் பூரணமாக நிலை கொண்ட பின்னர் யுத்த நிறுத்தத்தை நாம் கடைப்பிடிப்போம்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

பி. பி. சி. வானொலி நேற்று நண்பகல் அதனைத் தெரிவித்தது.

ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இன்னும் உறுதிப்படுத்தவில்லை என்றும் பி. பி. சி. வானொலி மேலும் தெரிவித்தது. (இ-எ)

### 10 விமானங்களில் இந்தியத் துருப்புகள் வடக்கில் இறங்கின!

கொழும்பு, ஜூலை 30

பத்து விமானங்களில் இந்தியத் துருப்புக்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தளத்தில் இறங்கின.

இத்தகவலைத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார்.

சுமார் ஆயிரத்து எழுநூறு இந்தியத் துருப்புக்கள் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் திரு. அத்துலத்முதலி

(2 ஆம் பக்கம் பார்க்க)

### பலாலி முகாம்மேல் விமானங்கள் சாகஸம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இந்திய விமானங்கள் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் அமைந்துள்ள வானவெளிகளில் சாகசம் புரிந்தன.

இன்று காலை எட்டு மணியளவில் பலாலி விமானத் தளத்துக்கு மேலாக ஐந்து இந்திய விமானங்கள் பறந்து கொண்டிருந்தன.

இவற்றில் இரண்டு விமானங்கள் பலாலி விமானத்தளத்தில் தரையிறங்க ஏனைய மூன்று விமானங்கள் வான வெளிகளில் சுழன்றும் சரிந்தும் சாகசம் புரிந்தன. (இ 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆண்டு அவலங்கள் இன்று அகல்கின்றன

## சரித்திரத்தில் முக்கிய நிகழ்ச்சி
### ஜனாதிபதி மாளிகை வரவேற்பில் ராஜீவ் உரை

கடந்த நான்கு ஆண்டு காலமாக நிலவி வந்த அவலங்கள் இந்த ஒப்பந்தம் மூலம் நீங்குகின்றன

இலங்கை — இந்திய வரலாற்றில் இது ஒரு முக்கிய நிகழ்ச்சி ஆகும்.

புதன் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் ராஜீவ் காந்திக்கு வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது.

அப்போது திரு ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் சொன்னதாவது:

எனது பாட்டனார் ஜவஹர்லால் நேருவும் இலங்கை வந்தார்.

நானும் இலங்கைக்கு இப்போது வந்துள்ளேன். அந்நியர்கள் மத்தியில் இருப்பவர் போன்ற உணர்வு எனக்கு வரவே இல்லை என்பதை உண்மையாகச் சொல்கின்றேன்.

**இலங்கை உதவி கேட்டது**

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இருள் சூழ்ந்த ஜூலை மாசத்தில் தீவை ஆட்டிப்படைத்த பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது நல்லெண்ண உதவிகளை இலங்கை அரசு நாடியது.

இந்த நான்கு ஆண்டுகளும் சோதனைகள், இடுக்கண்கள் நிறைந்த காலம் ஆகும்.

பெரும் அழிவுகள் ஏற்பட்டன. நூற்றாண்டுகளுக்கு மேலாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்த சமூகங்கள் பிரிந்து போயின. இலங்கையின் பொருளாதாரம் சீர்கேடு அடைந்தது. அகதிகள் பாக்குநீரிணை ஊடாக இந்தியா வந்தனர்.

இந்தக் கஷ்டத்தின் மத்தியிலும் நாம்பேச்சுக்களை நடத்திக்கொண்டு வந்தோம்.

நாம் ஒரு உடன்பாடு கண்டிருக்கின்றோம். இரு நாடுகளின் சரித்திரத்தில் இது முக்கிய நிகழ்வாகும்.

இது அமைதியை உருவாக்கும் சகோதரத்துவத்தை உருவாக்கும் உடன்படிக்கை.

இது இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உறுதி செய்கின்றது.

அகதிகள் நாடு திரும்ப இது வழி வகுக்கின்றது. இரு நாடுகளின் உறவு மீது மூடப்பட்டிருந்த மேகங்களை இந்த உடன்படிக்கை அகற்றுகின்றது.

இலங்கை அரசினதும் மக்களினதும் விவேகத்துக்கும் புரிந்துணர்வுக்கும் கிடைத்த சாணிக்கையாக இந்த உடன்படிக்கை அமைகின்றது.

**ஜே. ஆரின் துணிச்சல்**

இதற்காக ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் துணிச்சலுக்கும் இராஜதந்திரத்துக்கும் நான் விசேஷமாகப் புகழ்மாலை சூட்ட விரும்புகின்றேன்.

அன்பு, கருணை, சாந்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது இந்த உடன்பாடு.

இந்தியா, இலங்கைக்கு இடையேயான சரித்திர கால உறவுகளை இந்த உடன்படிக்கை உறுதிப்படுத்துகின்றது.

பூகோள ரீதியிலான அமைப்பு மட்டும் எம் இரு நாடுகளையும் கட்டுப்படுத்தவில்லை; எம் உறவு இதயத்துடனும் மனதுடனும் இணைந்தது; சரித்திரத்துடனும் தத்துவத்துடனும் கலையுடனும் இலக்கியத்துடனும் இணைந்தது.

தற்கால சூழ்நிலை அன்றாட வாழ்வுடனும் எம் உறவுகள் இணைந்துள்ளது.

நாம் ஒருவர் மீது ஒருவர் வைத்துள்ள நம்பிக்கைதான் பேச்சுக்களுக்கு அடிப்படையாக அமைந்தன.

எம் நம்பிக்கை சந்தோஷமான முடிவினால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒற்றுமைக்காகவும் அதன் நலனுக்காகவும் உழைக்க இந்தியாவுக்கு உறுதுணையாக இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது

ஒவ்வொரு உடன்பாடும் விசுவாசத்தின் செயல்பாடே.

விசுவாசம் வெற்றி அடைய விடாமுயற்சியும் பின்வாங்காத் தன்மையுமே தேவை

**வழிக்குக் கொண்டு வருவது எம்பணி**

ஜனநாயகத்தில் விமர்சிப்பவர்கள் தான் அதிகம்; ஆதரவளிப்பவர்களிலும் பார்க்க.

இந்தஉடன்பாட்டைப் பாதுகாப்பதும் குறை கூறுபவர்களை வழிக்குக் கொண்டு வருவதும் எம் பணியாகும்

இந்த உடன்பாட்டை அமுல் நடத்தும் முக்கிய சட்டத்துக்கு நாம்போக வேண்டியுள்ளது.

அதற்காக எம் மத்தியில் உள்ள நல்லெண்ணத்தைப் பயன்படுத்த வேண்டும்

இது பழிவாங்குதலுக்கும் பதில் குற்றச்சாட்டுச் சுமத்துவதற்கும் உரிய நேரமல்ல.

நொந்த உள்ளங்களைச் சமாதானப் படுத்தும் நேரம் இது. உறவைப் புதுப்பிப்பதற்கும் புனர் நிர்மாணம் செய்வதற்கு ஏற்ற நேரம் இது.

எமது வழிகாட்டியாக சுப்பிரமணிய பாரதியார் அமையட்டும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமைநீங்கில் அனைவருக்கும் தாழ்வு

இந்தப் படிப்பினையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். வேறெந்தப் பாடமும் எமக்குத் தேவை இல்லை.

**பயணத்தை மீண்டும் தொடர்வோம்**

இந்தஉடன்பாடுமூலம் எமது பயணத்தை மீண்டும் தொடர்வோம்.

இரண்டு நாடுகளும் அந்தப் பயணத்தைத் தான் இதுவரை மேற்கொண்டு வந்துள்ளன

யுத்தம், வன்செயலைத் துறந்த அசோக மன்னன் தனது மகனை புத்தரின் கருணை, அன்பு, அஹிம்சை ஆகியசெய்தியுடன் இலங்கைக்கு அனுப்பி வைத்தார்

அந்தப் பயணத்தையே மீண்டும் தொடர்வோம்.

இந்திய—இலங்கை நல் லுறவு நீடூழி வாழ்க.

இப்படி பிரதமர் காந்தி பேசி முடித்தார்.

### தமிழ் அமைச்சர்கள் மூன்றுபேரும் பங்குபற்றினர்

கொழும்பு, ஜூலை 30

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஜனாதிபதி மாளிகைக்கு முன் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிகளில் மூன்று தமிழ்அமைச்சர்களும்கலந்துகொண்டனர்.

அமைச்சர்கள் தொண்டமான், தேவநாயகம், இராசதுரை ஆகியோரே கலந்து கொண்டவர்கள் ஆவர்.

பிரதமர் காந்தி கொழும்பில்தங்கிநிற்கும் வரை இலங்கை அரசின் சார்பில் அவருடன் உடனிருக்கும் அமைச்சராக நிதி அமைச்சர் ரொனி டி மெல் கடமையாற்றுகிறார். (உ-எ)

### ராஜீவுக்கு மரீனாவில் பாராட்டு விழா

சென்னை, ஜூலை 30

இலங்கை இனப்பிரச்சினைக்கு திரு. ராஜீவ் காந்தி சுமுகமானஉடன்பாடு கண்டமையைப் பாராட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சென்னை மரீனா கடற்கரையில் பாராட்டு விழா ஒன்று நடைபெறும்.

இந்தவிழாவை தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

இதேவேளை, பிரதமர் ராஜீவ் காந்தியையும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் தமிழக தலைவர்கள் பலர் பாராட்டியுள்ளனர். (உ-ஒ)

### இந்திய டாக்டர்களின் 9 நாள்வேலை நிறுத்தம் முடிவு

புதுடில்லி, ஜூலை 30

இந்திய டாக்டர்களின் ஒன்பது நாள் வேலை நிறுத்தம் புதன்கிழமையுடன் முடிவடைந்தது.

நிபந்தனை இன்றி வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொள்வதாக டாக்டர்கள் அறிவித்தனர்

மனித வளம் மேம்பாட்டுத்துறை அமைச்சர் பி. வி. நரசிம்மராவின் வேண்டுகோளை ஏற்று வேலைநிறுத்தத்தை விலக்கிக்கொள்வதாக டாக்டர்கள் தூதுக்குழு செவ்வாய் நள்ளிரவு பிரதமரைச் சந்தித்துத் தெரிவித்தது.

வேலை நிறுத்தம் செய்த டாக்டர்களை பழி வாங்கக் கூடாது என்றும் தூதுக்குழு பிரதமரைக் கேட்டுக் கொண்டது. (இ-எ)

### 4 இடங்களில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 30

ஊரடங்குச் சட்டத்தை மீறி தென்னிலங்கையில் 4 நகரங்களில் சிங்களவர் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

கடைகள், கட்டடங்களுக்குத் தீ மூட்டப்பட்டன.

—இப்படி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

### ஊர்காவல் படையினருக்கு அழைப்பு

கொழும்பு மாவட்டத்தில் உள்ள ஊர்காவல் படையினரை, உடனடியாக சம்பந்தப்பட்ட பொலீஸ் நிலையங்களில் ஆஜராகும்படி பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது. (இ-எ)

### ● காந்தி பாடிய பாரதி பாடல்

கொழும்பு, ஜூலை 30

இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரத்தில் பேசுகையில் பாரதி பாடல் ஒன்றைப் பாடினார்

''எமது வழிகாட்டியாக சுப்பிரமணிய பாரதியார் அமையட்டும்,

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு''

'இந்தப் படிப்பினையை நாம் கடைப்பிடிக்க வேண்டும் வேறெந்தப் பாடமும் எமக்குத் தேவை இல்லை' என்று அவர் குறிப்பிட்டார். (அ-எ)

### பரிமாறப்பட்ட தஸ்தாவேஜுக்கள்

கொழும்பு ஜூலை 30

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் நேற்று மூன்று தஸ்தாவேஜுகளைப் பரிமாறிக்கொண்டனர்.

1. இலங்கை—இந்திய உடன்பாடு

2. அது சம்பந்தமான இணைப்பு.

3. இரண்டு தலைவர்களும் ஆளுக்கு ஆள் எழுதிக்கொண்ட கடிதங்கள்.

—இவைகளே அந்த மூன்று தஸ்தாவேஜுகள். (உ-எ)

### ● சரியாக 3.37 மணிக்கு கைச்சாத்து

கொழும்பு, ஜூலை 30

நேற்றுப் பிற்பகல் சரியாக 3 37 மணிக்கு இலங்கை—இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

இலங்கை அரசின் சார்பில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் இந்திய அரசின் சார்பில் பிரதமர் ராஜீவ்காந்தியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

கைச்சாத்திடும் வைபவம் பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது

ஒப்பந்தம் கைச்சாத்திடும் வேளையில் அமைச்சர்கள் காமினி திஸநாயக்கா, ரொனிடிமெல், ஏ சி.எஸ். ஹமீத். ஆனந்த திஸ்ஸ அல்விஸ், ஈ.எல்.பி ஹுருள்ளே, கே டபிள்யூ தேவநாயகம், எஸ் இராசதுரை, நிசங்க விஜயரத்தின, தொண்டமான், ரஞ்சித் அத்தபத்து, ரணில் விக்ரமசிங்க ஆகியோர் சமுகம் அளித்திருந்தனர். (இ-எ-10)

### விபத்து

கோப்பாய், ஜூலை 30

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்குச் சமீபமாக இடம் பெற்ற மினி வான்— ஸ்கூட்டர் விபத்தில் ஸ்கூட்டர் ஓட்டி வந்தவர் காயம் அடைந்தார். (இ-ரி)

### புலிகள்---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

எமது அனுமதி இன்றி வெளியேற மாட்டா என்று இந்தியா எமக்கு உறுதி அளித்துள்ளது என்றார். (இ-10)

### மேலும் 15 பேர் பலி!

கொழும்பு, ஜூலை 30

இன்று கொழும்பில் இடம்பெற்ற அசம்பாவிதங்களில் மேலும் 15 பேர் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள். (இ)

### ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை30

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை நாளையும் நாளை மறுதினமும் நடைபெறமாட்டாது.

## இந்தியா துன்பம் இழைத்திருந்தால்
# மன்னிப்பேன் ஆனால் மறக்கவே மாட்டேன்!

### விஜயனின் காலத்தின் பின் முக்கிய விஜயம்
### ராஜீவை வரவேற்று ஜே. ஆர் உரை

இந்தியா துன்பம் இழைத்திருந்தால் மன்னிப்பேன். ஆனால் மறக்க மாட்டேன் விஜயன் இலங்கை வந்த பின்னர் இடம்பெற்ற மிகவும் பிரச்சினைக்குரிய விஜயமாக உங்கள் வருகை அமைந்துள்ளது

ராஜீவ் காந்தியை வரவேற்று உரை நிகழ்த்துகையில் ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

விஜயன் 2 ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்இங்கு வந்தான்.

சிங்கள இனத்தை உருவாக்கியவன் அவனே.

ஆகவே உங்கள் வருகை சிங்கள இனத்துக்கு புத்துயிர் கொடுக்கும் என்று நம்புகின்றேன்; புதுவாழ்வு அளிக்கும் என்று நம்புகின்றேன்.

**சிவில் யுத்தம்**

பல ஆண்டுகளாக நாடு சிவில் யுத்தத்தில் சிக்கி இருந்தது. அது இன்றுடன் முடிவடைகின்றது.

எனது அரசு, உங்கள் அரசு, தமிழ் நாடு அரசு ஆகியனவும், உபயோகமில்லாத யுத்தம் ஒன்றை நடத்தியவர்களும் இந்த உடன்படிக்கையைச் சரிவர அமுல் நடத்தினால் சமாதானம் இன்றே ஆரம்பமாகும்.

இலங்கையின் சுதந்திரம், ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியன இலங்கையினால் மட்டும் பாதுகாக்கப்படும், இந்தியாவின் வலிமையுடன்.

இது ஒரு பெரும் சாதனை.

நாம் எல்லோரும் தவறு செய்கின்றோம்.

நான் பல தவறுகளைச் செய்திருக்கின்றேன்; வருங்காலத்திலும் செய்யக்கூடும்.

நீங்களும் பிழை விட்டிருக்கிறீர்கள்; எதிர்காலத்திலும் பல பிழைகளை விடக்கூடும். ஆனால் நாம் புண்களைப் புதுப்பித்துக்கொண்டு கவலைப்பட்டுக் கொண்டு இருக்க முடியாது.

எனது அரசியல் வாழ்க்கை நியாயமான காலம் நீண்டது எனக்கெதிராக நடந்து கொண்டவர்களை நான் எப்போதும் மன்னித்தே வந்துள்ளேன். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை மட்டும் நான் மறப்பதில்லை.

ஆகவே இலங்கையும் இந்தியாவும் கடந்து பல நூற்றாண்டுகளாகசெயல்பட்டது போன்று இனிச் செயல் படலாம். முன்னர் கூறியது போன்று, நான் இந்தியாவை நேசிப்பவன்; இந்திய மக்களின் நண்பன். இந்தியாவின் தலைப்புதல்வனைப் பின்பற்றி நடப்பவன். இன்னும் அதிகம் சொல்ல முடியும்.

**பிழையை மன்னிப்பது தெய்வீகம்**

ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்,

பிழை விடுவது மனித இயல்பு; மறப்பது தெய்வீகம்

உங்கள் நாடும், மக்களும் எமக்கு துன்பம் விளைத்திருந்தால் நான் அதை மன்னிக்கின்றேன். ஆனால் அதை நான் மறக்கமாட்டேன்.

உலக முன்னேற்றத்துக்காகவும் பிராந்தியத்தின் முன்னேற்றத்துக்காகவும் இரண்டு நாடுகளும் கரம் கோர்த்துச் செயல்படுவோம்—

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன சொன்னார். (இ-எ)

## ஒப்பந்தம் கைச்சாத்து



இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் திரு. ராஜீவ் காந்தியும், திரு. ஜே. ஆரும் கைச்சாத்திடும்போது எடுக்கப்பட்ட படங்கள். (நன்றி: ரூபவாஹினி படம்: சன் ஜேன்சன்)

### கருணாநிதி, நெடுமாறன் வீரமணி எதிர்ப்பு

சென்னை ஜூலை30

ராஜீவ் காந்திக்கு சென்னையில் வரவேற்பு அளிக்கப்படும் தினமான ஞாயிற்றுக்கிழமைராஜீவ் ஜே. ஆர். ஒபபந்த வாசகங்களை எரிக்கப்போவதாக தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியும் தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு பட. நெடுமாறனும் அறிவித்துள்ளனர்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக பிரதமர் ராஜீவ் மேற்கொண்ட நடவடிக்கையைப் பாராட்டி தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் இந்த பாராட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது

திராவிடக் கழகப் பொதுச்செயலாளர் திரு. கி. வீரமணியும் ஒப்பந்தத்தைக் கண்டித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு மிரட்டலாக அமைந்துள்ளது என்று வீரமணி கருத்துத் தெரிவித்தார்.

### பத்து விமானங்கள் - - - -

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராய்ட்டரிடம் தெரிவித்தார்.

நாளை பிற்பகலில் இருந்து யுத்த நிறுத்தம் அமுலுக்கு வருகின்றது.

அடுத்த சனிக்கிழமைக்கு முன்னர் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்.

— இப்படி இலங்கை – இந்திய உடன்பாடு கூறுகின்றது. (உ-எ)

### இன்றைய லண்டன் நாளிதழ்கள் கருத்து

லண்டன், ஜூலை 30

இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக லண்டன் நாளிதழ்கள் இன்று வியாழன் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருக்கின்றன.

**கார்டியன்**

உள்நாட்டில் அரசியல் தோல்விகளினால் துவண்டுபோன இந்தியப் பிரதமர்காந்தி வெற்றித் தாகம் கொண்டு செய்து கொண்ட உடன்பாடு இது.

இதுஅவரின் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்வுகாண உதவுமா என்பதை இனித்தான் பார்க்க வேண்டும்.

**இன்டிப் பென்டென்ட்**

சிறிய அயல்நாடு மீது மிகப்பெரிய நாடு திணித்த உடன்படிக்கை இது. (An accord forced on Sri Lanka by a gaint neighbour.)

இந்த உடன்பாடு மூலம் சிங்கள இனம் விற்கப்பட்டுவிட்டதாகச் சிங்கள மக்கள் கருதுகின்றார்கள்.

**பினான்சியல்டைம்ஸ்**

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் கடைசிச் சந்தர்ப்பமாக இந்த உடன்பாடு அமைகின்றது.

இதைத் தவறவிடின் சிவில் யுத்தம் தான் இலங்கையில் மூளும். (இ-எ)

### பிரபா உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் வேண்டுகோளுக்கு இணங்கவே இன்று(வியாழன்) நடைபெற இருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நிறுத்தப்பட்டன.

புலிகளின் புன்னாலைக் கட்டுவன் பொறுப்பாளர் ராஜன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர்திரு. ராஜீவ் காந்தி, தலைவர் பிரபாகரனுக்குச் சில வாக்குறுதிகளை அளித்துள்ளார்.

இந்த வாக்குறுதிகளை முன்னிட்டே ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நிறுத்தப் பட்டுள்ளன என்றும் திரு. ராஜன் கூறினார். (7-10 160

### இந்தியத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பேச்சுவார்த்தைமுடிந்ததும் திரு. பிரபாகரன் இங்கு வருவார் என்றும் அதன் பின்னரே ஆயுதங்களை ஒப்படைக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்றும உதயனுக்கு மிக நம்பிக்கையாகத் தெரிய வந்தது.

செய்தி அச்சுக்குப் போகும் வேளையிலும் யாழ் குடாநாட்டில் பெரும் சத்தத்தைக் கிளப்பிக்கொண்டு இந்திய விமானங்கள் தாழப் பறந்தன.

### சாவகச்சேரி இந்து தெரிவு

சாவகச்சேரி, ஜூலை 30

சாவகச்சேரி கல்வி வட்டாரத்தில் முதன்மைக் கொத்தணிப் பாடசாலையாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரியின் அதிபர் திரு கே. எஸ். குகதாசன் கொத்தணி அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வமைப்பில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மகளிர் மகா வித்தியாலயம், நுணாவில் அ. த. க. பாடசாலை. அமிர்தாம்பிகை வித்தியாசாலை, கெருடாவில் சரஸ்வதி வித்தியாலயம் தனங்கிளப்பு அ த. க. பாடசாலை, சாவகச்சேரி அ த. க. பாடசாலை, மீசாலை கமலாம்பிகை வித்தியாசாலை. கல்வயல் சண்முகானந்த வித்தியாசாலை, சக்தியம்மன் வித்தியாசாலை ஆகியவை இயங்கும். (இ-31)


**திருமண அறிவித்தல்**

1987 ஜூலை மாதம் 15 ஆம் திகதி பி. ப 5. 00 மணியளவில் எமது கனிஷ்ட புத்திரி அனெற்பமிலாவுக்கும், தென் இந்தியா, கன்னியாகுமரியைச் சேர்ந்த S. ஜெயமணி என்பவருக்கும், கன்னியாகுமரி, உபகாரமாதா கோவிலில், பெற்றோர் நிச்சயித்து விவாகம் இனிதே நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இத்தால் அறியத் தருகிறோம்.

திரு. திருமதி. S. T. சிறீநாதன் கிழக்குத்தெரு, ஊர்காவற்றுறை.

(1373)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 30-07-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on Thursday July 30, 1987.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org